பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா: 5.00 பக்கங்கள் பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 தை 17 புதன்கிழமை (30.01.2002) தொலைபேசி 3378 ஒலி 42

மல்லிகா மிக்சர் மாளிகை
மல்லிகா
நறு நறு மொறு மொறு
காரமான சுவையுடன்
ரேஸ்ரி பொம்பே ரீப்பீஸ்
ரேஸ்ரி ரைற்றானிக் காரவடை
ரேஸ்ரி மரவள்ளி பீஸ்

## தேர்தல் சட்டமூலம் திருத்தப்படாவிடில் வட-கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல் !

### தேர்தல் ஆணையம் அறிவிப்பு

(கொழும்பு)

மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களை வடக்குக் கிழக்கில் ஒத்திவைப்பது தொடர்பாக அரசாங்கத்துக்கும் தேர்தல் ஆணையகத்துக்கும் இடையில் இழுபறி நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தேர்தல் ஒத்திவைக்கப்பட இருப்பதாக அரசு அறிவித்திருந்தபோதும் தேர்தல்ஆணையம் தேர்தல் அலுவல்களை மேற்கொண்டு வருகின்றது. இந் நிலையில் வடக்கு தவிர்ந்த கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடவடிக்கைகளில், வேட்பாளர்களை தெரிவதிலும் அரசியல் கட்சிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

இதேவேளை வடக்கு கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்தி வைப்பதாயின் தேர்தல் சட்டமூலத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படாதுவிட்டால் வடக்கு கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல்களை ஒத்தி வைக்க முடியாதென தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக உள்ளூராட்சித்தேர்தல் சட்டத்திருத்தமூலத்தை (10ம் பக்கம் பார்க்க)

## ஈட்டிதாக்கி மாணவி காயம்

(ஏழாலை)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வல்லுனர் போட்டியில் ஈட்டி எறிதல் போட்டி இடம்பெற்றுக் கொண்டிருந்த சமயம் அவ்விடத்துக்கு குறுக்கே சென்ற மாணவி ஒருவர் ஈட்டியினால் தாக்கப்பட்டு படுகாயமடைந்துள்ளார்.

நேற்று நண்பகல் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் குறித்த கல்லூரியில் ஆறாம் தரத்தில் கல்விகற்கும் முருகையா வக்சலா (வயது 12) என்ற மாணவியே காயமடைந்து யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ந.12.4)

### மீன்பிடித்தடைக்கு எதிராக

# யாழ். செயலகத்திற்கு முன் இன்று மறியல் போராட்டம்!

## இரவு பகலாகத் தொடரும்

(அலுவலக நிருபர்)

**வடபகுதியில் இடம்பெற்றுவரும் கொடிய யுத்தத்தினால் கடந்த பல வருடங்களாக கடற்றொழிலாளர்கள் அனுபவித்துவரும் துன்பங்களுக்கு முடிவுகட்டும் வகையில் அனைத்து கடற்றொழிலாளர்களையும் ஒன்றுதிரட்டி இன்று யாழ் செயலகத்துக்கு முன்பாக வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் மறியல் போராட்டம் ஒன்றை நடத்துவுள்ளது.**

**எதுவிதமான தடையும் இன்றி கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதி கிடைக்கும்வரை இரவு பகலாக தொடர்ந்து இம் மறியல் போராட்டம் நடைபெறும்.**

கடந்த பல வருடங்களாக இடம்பெற்று வரும் இன அழிப்பு யுத்தத்தை காரணங்காட்டி கடல்வலய சட்டத்தின் மூலம் மீன்பிடிக்கும் உரிமையை மறுத்துவரும் சிங்கள பேரினவாத

அடிப்படையில் யுத்தநிறுத்தம் செய்து இராணுவத்தினருக்கும் தங்களுக்கும் இடையில் பரஸ்பர நல்லெண்ண உறவை பரிமாறும் அதேவேளை கடற்றொழிலாளர்கள்

கனவுகண்டோம். இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஆகியோரிடம் கூட எமது

## மட்டு-மண்முனைபடகு சேவை புலிகள் அனுமதி-படையினர் தடை

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகளினால் தடை விதிக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு மண்முனை கொக்கட்டிச்சோலை படகுசேவைக்கு புலிகளால் அனுமதி வழங்கப்பட்டபோதும் விஷேட அதிரடிப்படையினரால் அதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடுருவல் தாக்குதல் சம்பவத்தை அடுத்து புலிகள் படகுசேவைக்கு கடந்த வருடம் யூன்மாதம் 19திகதி முதல் தடை விதித்திருந்தனர் எனினும் தற்போதைய சூழ்நிலையை கருத்திற்கொண்டு புலிகள் இத்தடையை நேற்று முன்தினம் முதல் நீக்கி படகுப்போக்குவரத்துக்கு அனுமதி வழங்கியிருந்தனர்.

இந் நிலையில் அனுமதி வழங்கப்பட்ட 24மணி நேரத்துக் குள் விஷேட அதிரடிப்படையினர் படகுப் போக்குவத்துக்கு

... மறியல் போராட்டம் நடைபெறும்.

கடந்த பல வருடங்களாக இடம் பெற்று வரும் இன அழிப்பு யுத்தத்தை காரணங்காட்டி கடல்வலய சட்டத்தின் மூலம் மீன்பிடிக்கும் உரிமையை மறுத்துவரும் சிங்கள பேரினவாத அரசுகளுக்கு எதிராக பல்வேறு வடிவங்களில் பல்வேறு போராட்டங்களை நடத்தினோம்.

விடுதலைப்புலிகள் சமாதானத்தில் நாட்டங்கொண்டு நல்லெண்ண அடிப்படையில் யுத்தநிறுத்தம் செய்து இராணுவத்தினருக்கும் தங்களுக்கும் இடையில் பரஸ்பர நல்லெண்ண உறவை பரிமாறும் அதேவேளை கடற்றொழிலாளர்கள் மட்டும் மீன்பிடிப்பதற்கு அரசு மறுத்துவருகின்றது.

ரணில் தலைமையில் புதிய அரசு பதவியேற்றபின் கடற்றொழிலாளருக்கு விடிவு வரும் என்று கனவுகண்டோம். இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஆகியோரிடம் கூட எமது நிலை தொடர்பாக எடுத்தக்கூறியுள்ளோம். ஆனால் அவர்கள் இருவரும் எமக்கு விமோசனம் அளிக்கக் கூடிய எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை.

(6ம் பக்கம் பார்க்க)

### எஸ்.பி.திஸநாயக்கா கொலைமுயற்சி

# ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு பணிப்பாளரை கைதுசெய்ய உத்தரவு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அரசியல் எதிரியாக கருதப்படும் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவை கடந்த நவம்பர் மாதம் கொலைசெய்வதற்கு திட்டமிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் பணிபபாளரான உதவி பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் கருணாரத்னவை கைது செய்து நீதிமன்றத்தின் முன் நிறுத்துமாறு கண்டி நீதிமன்றம் நேற்று பிடிவிறாந்தை பிறப்பித்துள்ளது.

குற்றத்திணைக்களப்பணிப்பாளர் மூலம் இப்பிடிவிறாந்து அமுலப்படுத்தப்பட வேண்டும் என்று கண்டி நீதிமன்ற நீதிவானும் மாவட்ட மேலதிக நீதிவானுமாகிய சி.வி.ராஜபக்ஷ தனது உத்தரவில் தெரிவித்துள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

## 54வது சுதந்திர தினத்தன்று 2000கைதிகள் விடுதலை

(கொழும்பு)

பெப்ரவரி மாதம் 4ம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் 54வது சுதந்திர தின வைபவத்தையொட்டி சுமார் 2000சிறைக் கைதிகள் விடுதலை செய்யப் படவுள்ளனர்.

சுதந்திர தினத்தையொட்டி கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கும் வழமையான நடைமுறைக்கு இணங்கவே இரண்டாயிரம் கைதிகளும் விடுதலை செய்யப்படவுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன்அமரதுங்கா அறிவித்துள்ளார். (வ)

## ஏப்ரல் முதல் மின் கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை மின்சாரக்கட்டணத்தை ஏப்ரல் முதல் அதிகரிக்கவுள்ளது.இம் மின்கட்டணம் 30முதல் 40வீதம் வரை அதிகரிக்கப்படவுள் ளதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(10ம் பக்கம் பார்க்க)

அதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடுருவல் தாக்குதல் சம்பவத்தை அடுத்து புலிகள் மண்முனை கொக்கட்டிச்சோலை படகுப்போககுவரத்துக்கு அனுமதி வழங்கியிருந்தனர்.

இந் நிலையில் அனுமதி வழங்கப்பட்ட 24மணி நேரத்துக் குள் விஷேட அதிரடிப்படையினர் படகுப் போக்குவத்துக்கு நேற்று மீண்டும் தடை விதித்துள்ளனர்.

### நாரந்தனை சம்பவம்

# வழக்கு விசாரணையில் சட்டத்தரணிகள் எவருமில்லை

(நீதிமன்ற நிருபர்)

கடந்த பொதுத்தேர்தலின்போது நாரந்தனையில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்கள் தொடர்பாக சந்தேக நபர்களுக்கு எதிரான குற்றப் பத்திரங்களை ஊர்காவற்றுறை பொலிஸ்அதிகாரி நேற்று யாழ் நீதிமன்றத்தில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் சமர்ப்பித்தார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மீது 29குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன நேற்றய வழக்கு விசாரணையின் போது சந்தேக நபர்கள் சார்பிலோ காய

(10ம் பக்கம் பார்க்க)



தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கூடாதென கோரி ஜே.வி.பியினர் நேற்று கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையே படத்தில் காண்கிறீர்கள்.
(படம்: தமிழ் நெற்)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் அடிப்படையில் இருந்து ஆங்கிலத்தில் எழுத வாசிக்க கதைக்கப் பயில தபால் மூலமும், ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை, (4407)


## ஆசிரியர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரிநலன் புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் ஆசிரியர் சேவையில் 25 வருடங்களைப் பூர்த்திசெய்தவர்களைக் கௌரவிக்கும்நிகழ்வு இன்று ஆசிரியர் ய. ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் கே. இராசதுரை, உப அதிபர்கள் கே. சிவகுமாரன் திருமதி பாலசுந்தரம் பிள்ளை ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (இ)

# நைஜீரிய ஆயுதக்களஞ்சிய வெடி அனர்த்தம்

# உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை ஆயிரமாக உயர்வு

## லாகோஸ் நகரம் சுடுகாடாகக் காட்சி

(லாகோஸ்)

நைஜீரியா நாட்டின் லாகோஸ் நகரிலுள்ள ஆயுதக் களஞ்சியத்தில் ஏற்பட்ட தீவிபத்தில், ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக அஞ்சப்படுகிறது.

பலநூறுக்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளதாகவும், இவர்களின் நிலைமை கவலைக்கிடமாக விருப்பதாகவும் லாகோஸ் செய்திகள் தெரிவிக்கின்றன.

'இகேஜா' படைத்தள முகாமிலுள்ள ஆயுதக் களஞ்சியத்தில் தீப்பற்றியதனால் களஞ்சியத்திலிருந்த ஷெல்கள், ரொக்கற்றுக்கள், ஏவுகணைகள் மற்றும் குண்டுகள் என்பன வெடித்துச் சிதறியது.

இதனால் முகாமிலிருந்த படைவீரர்கள் அவர்களது குடும்பத்தவர்கள் மற்றும் முகாமைச் சுற்றியிருந்த பொதுமக்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உடல் கருகி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

களஞ்சியத்தில் குண்டுகள் வெடிப்பொருட்கள் வெடித்ததனால் எழுந்த சத்தத்தில், பெருமளவான மக்கள் பீதியடைந்துஉயிரைக் காப்பாற்ற ஓடி நகரின் அருகே இருந்த ஆழமான கால்வாயில்வீழ்ந்து உயிரிழந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகளும் சிறுவர்களும் என்றும் தெரியவருகிறது.

அத்துடன் குண்டுவெடிப்பால் மின்சார வயர்கள் அறுந்து, ஏற்பட்ட மின் ஒழுக்கினாலும் பெருமளவானோர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை இவ்வெடிவிபத்து அரசைக்கவிழ்க்கும் சதிமுயற்சியோ என சந்தேகம் எழுந்தபோதும் அது தற்செயலாக ஏற்பட்ட விபத்தென உறுதியாகியுள்ளது.

சம்பவம் குறித்து உடனடி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுளதுடன் ஏற்பட்ட சேதவிபரங்களும் மதிப்பிடு செய்யப்படுகின்றன. (இ)

# பசு இனவதைதடுப்புச்சங்கம் மாநகரமுதல்வருக்குகடிதம்

யாழ் மாநகரசபை கொல்களத்தில் யாழ்.குடா நாட்டில்பயன் தரும் பசுக்கள் படுமோசமாக அழித்தொழிக்கப்பட்டு வருவது கவலைக்குரியதாகும் ஆகவே இதை தடுப்பதற்கு உரிய உடன்நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு யாழ். மாவட்ட பசு இனவதைதடுப்புப்பாதுகாப்புச்சங்கம், யாழ்மாநகரமுதல்வருக்கும், ஆணையாளருக்கும் அனுப்பி வைத்துள்ள அவசரகடிதத்தில் கேட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளை கொல்களத்தில் 24 மணித்தியாலங்கள் கட்டி வைத்து பரிசோதிப்பதன் மூலம் பசுக்கள் வெட்டப்படுவதை தடுக்க முடியும் அதேபோல மிருகவைத்தியர்கள் இன்சேவையை ஒவ்வொரு நாளும்பெறுங்கொள்வதன் மூலமும் கொல்களத்தில் பணியாற்றுபவர்களை ஒழுங்குமுறையில் இடமாற்றுவதன் மூலமும் பசுவதையைத் தடுக்கமுடியும் என்றுமசுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ந)

## நல்லூர்க்கோட்ட பாடசாலைகளில்

# கற்பித்தல் உபகரணப் போட்டியில் தெரிவாகியோர் பெயர் விபரம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற ஆரம்பப்பிரிவு கற்பித்தல் உபகரணப் போட்டியில் பங்குபற்றி வலய மட்ட உபகரணக் கண்காட்சிப் போட்டிக்காக பின்வரும் ஆசிரியர்களின் உபகரணங்கள தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இவர்களின் பெயர் விபரம் வருமாறு

செல்வி அ. சூரியவதனி ஆனைப்பந்தி மெ. மி. வி மொழிவிருத்தி, திருமதி ம. சிவபாலசற்குணம் ஆனைப்பந்தி மெ. மி. வி புத்தக ஆக்கம், க. பற்குணநாதன் திருநெல்வேலி றோ. க. எண்விளக்கம், திருமதி உ. பஞ்சமூர்த்தி செட்டித்தெரு மெ. மி. வி ஆக்கச் செயற்பாடு, திருமதி தே. சிவராஜா கல்வியங்காடு இ. த. க. வி மொழித்திறன். திருமதி தே. தயாபரராஜா நல்லூர் ஸ்தான சி. சி. மொழி, கணிதம், செல்வி ச. பபிதா கொக்குவில் ஸ்தான சி. சி கூட்டற்பொறி திருமதி பு. காசுபதி கொக்குவில் ஸ்தான சி. சி வீடு செல்வி து. மனோகரி கொக்குவில் நாமகள். வி பார்த்து ரசித்தல், செல்வி து. மனோகரி கொக்குவில் நாமகள் வி வகுத்துப் பார்ப்போம், செல்வி த.வினோதா இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை சூள்பொருட்காட்சி, திருமதி த. அ. துரைசிங்கம் இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை சித்திரதொகுப்பு, திருமதி ஸ்ரீ. சண்முகதாசன் நாயன்மார்கட்டு மகேஸ்வரி சுழல் அட்டை, திருமதி பு. சுதந்திரராஜா நாயன்மார்கட்டு மகேஸ்வரி கணித ஆக்கம், சி. செந்தில்குமரன் கோண்டாவில் பரஞ்சோதி கணித வாய்ப்பாடு, எஸ். முருகதாஸ் கலட்டி மெ. மி. த. பா. ஆங்கில ஆக்கம், திருமதி ச. சிவலிங்கம் உயரப்புலம் மெ. மி. வி கணித ஆக்கம், செல்வி மா. மீனலோஜினி உயரப்புலம் மெ. மி. வி. மொழி விருத்தி, திருமதி லே. சிவகுமாரன் இந்து ஆரம்ப பாடசாலை தரம் 2 ஆக்கம், ல. மகாலிங்கம் இந்து ஆரம்ப பாடசாலை தேசிய கீதம், செல்வி இ. சுமதி இந்து ஆரம்பபாடசாலை ஆங்கில ஆக்கம், திருமதி ச. நாகேஸ்வரி கோண்டாவில் இ. ம. .வி மொழிவிருத்தி, திருமதி ஜெ. வரதராசா கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, மொழிவிருத்தி, திருமதி உ. சூரியகுமார் பெரியபுலம் மகா வி கணித ஆக்கம், திருமதி நி. இரங்கநாதன் நல்லூர் ஞானோதயா வி தேசியக்கொடி, திருமதி க. ஸ்ரீகரன் நல்லூர் ஞானோதயா வி சித்திரக்கலை, திருமதி வ. பிறைசூடி கோண்டாவில் இ. ம. வி சொல்லாக்கம், வலய மாணவர் ஆக்க போட்டிக்கு பின்வருவோர்களின் உபகரணங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

செல்வி யோ. சங்கீதா இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை மழலைக் கதைகள் செல்வன் நோ. சோபிகன் யாழ் இந்து ஆரம்ப பாடசாலை எமது வீடு, செல்வன் கி. மஜிந்தன் கோண்டாவில் சி. சி. த. க. பாடசாலை ஆமைகள், செல்வன் த. பாலசங்கர் பெரியபுலம் ம. வித்திபாலயம், செல்வி மு. சாளினி செட்டித்தெரு மெ. வி. சேவல். (செ)

## யாழ். செயலகத்திற்கு

படுத்தியும் பலவகையான கெடுபிடிகளுக்குள்ளாக்கியும் ''பாஸ்'' நடைமுறையைக கொண்டுவந்தும்எமது தொழிலாளர்கள் ஒடுக்கு முறையின் கீழ் அடக்கி நடாத்தப்பட்டு வந்துள்ளார்கள்.

விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்தை கடந்த வருடம் மார்கழியிலேயே அறிவித்து விட்டனர். பதிலுக்கு அரசும் மோதல்தவிர்ப்பை அறிவித்து விட்டது. இந்த நிலையிலுமா கடற்றொழில் செய்வதற்கு தடை விதிப்பு? புலிகள் இராணுவப் பகுதிக்குள்ளும், இராணுவம் புலிகள் பகுதிக்குள்ளும் நடமாடிக் கைகுலுக்கும் போது, கடற்றொழிலாளர்கள் தொழில் செய்வதற்கு தடை விதிப்பது மனிதநேயமோ? புலிகளின் பெயரால் எம்மைத் தடுப்பதுநியாயமா? எந்தவித சாக்குப்போக்கும் கூறாமல் எம்மை எங்களின் கடலிலே எந்தவித தடையுமின்றி தொழில் செய்ய அனுமதிக்கும் வரை மறியற்போர் ஓயாது.

இப்போராட்டம் வெற்றி பெற மக்களும் பூரண ஒத்துழைப்பு நல்கி எமது போராட்டத்திற்குஆதரவளித்துப் பல வருடங்களாக இன்னல்கள் அனுபவிக்கும் கடற்றொழிலாளர்களுக்கு உதவிக்கரம் நீட்டி ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடனும் தாழ்மையுடனும் கேட்டுக்கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-23)

# பெற்றோரின் ஆடம்பர வாழ்க்கையால் மாணவர்களின்பாதைதிசைமாறுகிறது

## புளொட் இருதயராஜன் உரை

பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு கல்வி விளையாட்டு ஆகியவற்றில் ஊக்கமளிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது அவர்களை நல்ல ஒழுக்கசீலர்களாகவும் சமூக சிந்தனையுள்ளவர்களாகவும் வளர்க்க வேண்டிய பாரிய பொறுப்பும் உடையவர்களாக இருக்க வேண்டும். அதன் மூலமே இன்றைய இளம் குருத்துகள் நாளைய சமுதாயத்தின் நல்ல பயன் தரும் விருட்ஷங்களாக வளரமுடியும்.

இவ்வாறு புளொட் அமைப்பைச் சேர்ந்த எஸ்.இருதயராஜன் வலிவடக்கு பிரதேச முன்பள்ளி விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் தினசரிப்பத்திரிகைகளை எடுத்து நோக்குவோமேயானால் அதில் வரும் செய்திகள் எமது சமுதாயம் எங்கே சென்றுகொண்டிருக்கின்ற தென்பதை காட்டுகிறது. இவ்வாறு செல்லுமானால் எதிர்காலத்தில் இங்கே ஒரு காட்டுமிராண்டிச் சமுதாயம் உருவாகுவதை யாராலும் தடுக்க முடியாது.

இப்பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தம் அத்துடன் பலசிறுவர்கள் பெற்றோரை இழந்து பாதுகாப்பின்றி நிர்க்கதியாக இருப்பதும் சில புல்லுருவிகள் இவர்களைதவறாக வழிநடத்துவதுமேயாகும்.

இன்றுஎத்தனையோ பிள்ளைகள் கல்விகற்க ஆர்வம் இருந்தும் உதவிகள் இல்லாத நிலையில் கல்வியைத்தொடர முடியாமல் உள்ளார்கள். ஆனால் மறுபக்கத்தில் வசதி படைத்த பலபெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தேவையற்ற ஆடம்பரப்பொருட்களை வாங்கிக்கொடுத்து அவர்களின் வாழ்க்கையைத் திசைதிருப்பி விடுகின்றார்கள் இவர்கள்தமது பிள்ளைகளின ஆடம்பரச்செலவிற்கு செலவிடும் பணத்தை வறிய மாணவர்களின் கல்விக்கு செலவிடுவார்களேயானால் அவ்வறிய மாணவர்களின் கல்வி வளம்பெறுவதுடன் தங்களது பிள்ளைகளை சரியான வழியில் நடத்திச்செல்லவும் முடியும் என்றுகூறினார். (இ)

# புலிகளின் பயிற்சிப் பாசறையை பி. பி. ஸி. குழுவினர் படம் பிடித்தனர்

(லண்டன்)

அண்மையில் வன்னிசென்ற பி. பி. ஸி குழுவினருக்கு விடுதலைப் புலிகள் தமது இராணுவப் பயிற்சிப் பாசறையைபார்ப்பதற்கும் படம் பிடிப்பதற்கும் அனுமதிவழங்கியுள்ளனர்.

இராணுவ முன்னணிக் காவலரணுக்கு சில கிலோ மீற்றர் தூரத்தே உள்ள ரகசியமான இடமொன்றில் இப் பயிற்சிப் பாசறை அமைந்துள்ளது.

அங்கு சுமார் நூற்றுக்கணக்கான ஆண் போராளிகள் ஒரு பாசறையிலும் அதற்கு அருகே உள்ள இன்னுமொரு இடத்தில் பெண் போராளிகளும்பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தனர்

ஆனையிறவு முகாம் தாக்குதலில் பங்குபற்றிய இப் போராளிகளுக்கு தாக்குதல் பற்றிய நுட்பங்களை விளக்குவதற்காகவே இப்பயிற்சி வழங்கப் படுவதாக புலிகளின் பயிற்சி ஆசிரியர் ஒருவர் தெரிவித்ததாக பி.பி ஸி. குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கனரக ஆயுதங்களையும் மோட்டார் ஷெல்களையும் தாங்கிய விடுதலைப் புலிப் போராளிகள் மாதிரி இராணுவ முகாம் அமைத்து ஒருபகுதியினர் இராணுவத்தினராகவும், மற்றையவர்கள் புலிகளாகவும் பாவனை செய்து தாக்குதல் நடத்தும் காட்சியையும் அங்கு காணக் கூடியதாக இருந்தது.

பயிற்சியில்ஆண்கள், பெண்களென பாகுபாடு காட்டப் படவில்லை தம்மால் எதையும் சாதிக்க முடியும் என்ற மனத்துடன் இரு சாராரும் கடும் வெயிலையும் பாராது கடுமையாக உழைக்கின்றனர் என்றும் பி. பி. ஸி குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பிரிட்டன் அமெரிக்கா, அவுஸ்திரேலியா இந்தியா, உட்பட பலநாடுகள் விடுதலைப்புலிகளை தடைசெய்த போதும்செய்தி ஊடகமொன்றிற்கு தமது இராணுவப் பயிற்சியை படம்பிடிப்பதற்கும் பார்ப்பதற்கும் புலிகள் அனுமதி வழங்கியமை இதுவே முதற் தடவை யென்பது இங்கு குறிப்பிடத்தக்கது4) (-ந

# சமாதானம் பற்றிப் பேசியவரை ஆவேசக் கும்பல் தாக்கியது

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மக்கள் பேச்சுவார்த்தை மூலமே சமாதானத்தைக் காண்பதற்கு எதிர்பார்ப்புடன்இருக்கிறார்கள் என்று கூறிய ஒரு சிங்களவர் தாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தேசிய பிக்குகள் முன்னணியின் கூட்டமொன்றில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து தெரியவருவதாவது: அண்மையில் நடைபெற்ற தேசிய பிக்குகள் முன்னணியின் கூட்டத்தில் எல்லோரும் இனப்பிரச்சினைக்கு யுத்தமே தீர்வு என்று பேசினார்கள்.

பொ.ஐ. முன்னணி முக்கியஸ்தரும், மேல்மாகாண முதலமைச்சருமான றெஜினோல்ட் குரே பேசுகையில், அங்கிருந்த ஒரு சிங்களவரைச் சுட்டிக்காட்டி, இவர் வன்னி சென்று திரும்பியவர். தொலைக்காட்சி ஊடகவியலாளர்கள் இவரிடம் பேட்டி கண்டபோது இங்குள்ளவர்கள் வன்னிக்குப் போகவில்லை என்றும், தான் அங்கு சென்று திரும்பி வந்தவன் என்ற முறையில் அங்குள்ளவர்கள் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்றும் கூறியிருக்கிறார்.

அத்துடன் விமல் வீரவன்ச கூறியதுபோல் பேச்சுவார்த்தை முறிவடையுமானால் கொழும்பில் குண்டு வெடிக்கும் என்பதை ஏற்றுக் கொண்டாலும், சமாதானத்தைக் குழப்பும் முயற்சியில் ஜே.வி.பி.யும், பொ.ஐ.முன்னணியும் ஈடுபடக்கூடாது. அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும். முன்பு பேச்சுவார்த்தைகள் பலமுறை தோல்வியடைந்துள்ளன. அந்தப் படிப்பினையை மனதில் கொண்டுபேச்சுவார்த்தையை நடத்த வேண்டும். சர்வதேச தலையீடும் நடுநிலையாளரின் உதவியும் அவசியம் என்றும் கூறியுள்ளார் என்று அவர் தனது பேச்சைத் தொடர்ந்தார்.

அப்போது அங்கு ஆவேசமாக வந்த 50 பேர் வரை கொண்ட கும்பல் வன்னி சென்று திரும்பி தொலைக்காட்சி ஊடகவியலாளருக்குப்பேட்டியளித்த சிங்களவரிடம் இருந்த ஆவணங்களைப் பறிக்கமுனைந்தது.

நிலைமையை ஊகித்தஅவர் ஓடிச் சென்று138 ஆம்இலக்க பஸ்ஸில் ஏறினார். எனினும் அந்தக் கும்பல் அவரைத்துரத்திச் சென்று கண்மூடித்தனமாகத் தாக்கியதில் அவரது இடது கண்பாதிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ)

## மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையின் புதிய மேயர் செல்வன் கந்தையன் பதவியேற்றதன் பின்பு மாநகர சபையின் இவ்வருட முதலாவது மாதாந்த கூட்டமும் இன்றுகாலை9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (செ-9)

## குருபீடாதிபதியின் பிறந்தநாளைமுன்னிட்டு விஷேட ஐயப்பன் பூஜை

(கொழும்பு)

சர்வதேச இந்துமதகுரு பீடாதிபதிசபரிமலைகுருமணி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியாரின் 44 - வது பிறந்த நாளை முன்னிட்டு இன்று மாலை 5.00 மணி முதல் கொழும்பு கொச்சிக்கடை தம்பையா சத்திரம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் சபரிமலை ஸ்ரீஐயப்ப சுவாமிக்கு பதினெட்டாம்படி விஷேட பூஜையும்பஜனையும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் முடிவில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படவுள்ளது. (செ)

## யாழ்.பொலிஸ் நிலையத்தில் 2001-இல் சிறுவர்,பெண்கள் பிரிவில் 252 முறைப்பாடுகள் பதிவு

(யாழ்ப்பாணம்)

சென்ற ஆண்டு மட்டும் யாழ் பொலிஸ் நிலையத்தில், சிறுவர்கள்பெண்கள்பொலிஸ் பிரிவில் 252 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ் பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இவற்றில் பெண்கள்மீதான துஷ்பிரயோகங்கள் உட்பட பல்வேறுபட்ட முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் 36பேர் ஊரில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் பாதிப்படைந்தும்,காயமடைந்த நிலையிலும் முறையிட்டதாகவும்;இருவர் கஞ்சா விற்பனை செய்த குற்றச்சாட்டிலும்,பலாத்கார நடவடிக்கையில் ஈடுபட்டதற்காக 8 பேரும்,வேறு குற்றத்திற்காக மிகுதிப் பேரும் முறைப்பாடு செய்துள்ளதுடன்,

யாழ் பொலிஸ்நிலையப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 129பேர் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும் பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (செ-10)

யாழ் பல்கலைக்கழகம்
**கேள்விப்பத்திர அறிவித்தல்**

**சீருடைத்துணிக்கான கேள்வி கோரல்**

யாழ். பல்கலைக்கழகத்திற்கு 550 மீற்றர் கருஞ்சாம்பல் நிற காற்சட்டைத் துணி வழங்குவதற்கு; முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 250/- பெறுமதியானகாசுக் கட்டளை/தபாற்கட்டளை நிதியாளர் யாழ்.பல்கலைக்கழகம் என்ற பெயரில் பெறப்பட்டு கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும். 6''×6'' அளவுடைய மாதிரித்துண்டு கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர், உறுதி செய்யப்பட் கட்டளை வழங்கப்பட்டு (3) மூன்று வாரங்களுக்கிடையில், யாழ். பல்கலைக்கழகப் பண்டகசாலையில் இவற்றை வழங்க ஆயத்தமாக இருக்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்குறிப்பிடப்படும் ஏதாவதொரு விலாசத்திற்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ 2002. 02. 15ம் திகதி பி.பகல் 2.30 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திர உறையின் இடது பக்க மேல் மூலையில் ''சீருடைத்துணி கேள்விப்பத்திரம்' எனக் குறிப்பிடவும்.

1. நிதியாளர் யாழ். பல்கலைக்கழகம் திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (தொ. பே. இல.021-2644)
2. நிதியாளர். யாழ். பல்கலைக்கழகம், மே/பா வரையறுக்கப்பட்ட யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்கம், ஈ.ஜி.4 சென்ரல் வீதி, கொழும்பு 12 (தொ. பே. இல. 435620)

**பதிவாளர்,**
யாழ். பல்கலைக்கழகம்.

(C-3412)

## இலங்கை - அமெரிக்கர் கூட்டுப் பல்கலைக்கழகம் கொழும்பில் ஆரம்பமாகும்

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் தொடக்கம் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் கூட்டுப்பல்கலைக்கழக நிகழ்ச்சித்திட்டம் ஒன்று கொழும்பில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் 91 உயர் கல்வி நிறுவனங்கள் அடங்கிய பிறைட்டின் நெற்வேக் நிறுவனம்,சிலிங்கோ கொண்சொலிடேற்றெட் நிறுவனம் என்பன இணைந்து நடத்தும் இத்திட்டத்தின் பாடவிதானங்கள் அனைத்தும் அமெரிக்க கல்வி நிறுவனங்களில் உள்ளவற்றிற்கு அமைவாகவே இடம் பெறும்.

இக் கூட்டுப்பல்கலைக் கழக நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இலங்கை மாணவர்கள் கொழும்பிலிருந்தவாறே அமெரிக்கப்பட்டத்தை பெற முடியும் என்றும் அமெரிக்காவுக்குச்சென்றுபட்டம் பெறும் இலங்கையர் ஒருவர் செலவிட வேண்டிய தொகையை விட 40 சதவீதம் செலவு குறைகிறது என்றும் அண்மையில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அமெரிக்கப்பிரதி நிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-8)

## வடக்கு - கிழக்கு மாகாணசபை தே. இ. சே. மன்றத்திற்கு 35இலட்சம் வழங்கியுள்ளது

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் வாழும் இளைஞர், யுவதிகளின் எதிர்கால திட்டங்கள், வளர்ச்சிப் போக்கிற்கான தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு வடக்கு - கிழக்கு மாகாணசபை, தேசிய இளைஞர் சேவை மன்றத்துக்கு 35 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

போர்நடவடிக்கைகாரணமாக தமது சொந்த இடங்களை விட்டு நலன்புரி நிலையம்,இடம் பெயர்முகாம்களில் தங்கிவாழும் இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி, சுயதொழில்திட்ட அறிமுகம், மொழிப்பயிற்சிவகுப்பு,விளையாட்டு நிகழ்வுகள் என்பன தொடர்பான செயற்பாடுகளுக்கு இந்நிதி பயன்படுத்தப்படும் என்பதுடன் சுயதொழில்களை ஆரம்பிப்பதற்கு குறைந்த வட்டி வீதத்துடன் வங்கிகளில் இலகுகடனை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதன் தலைவர் ரீ. ஜெயவீரா தெரிவித்துள்ளார். (செ-8)

## சான்றிதழ் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திய சைவசமயப் போட்டியில் அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலையைச் சேர்ந்த 36 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுக்கான சான்றிதழ்கள் கடந்த 25 ஆம் திகதி அறநெறிப் பாடசாலை அதிபர் க.சிவராசாவினால் வழங்கப்பட்டது. (செ)

## கிராமப்புற தபாலகங்களிற்கும் நவீன வசதிகள் ஏற்படுத்தப்படும்

(கொழும்பு)

நகர்ப்புற தபால் அலுவலகங்களிற்கு உள்ள வசதி, வாய்ப்புக்களைப் போன்று, கிராமப்புற தபால் அலுவலகங்களிற்கும் வழங்க தபால் திணைக்களம் புதிய வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. என வெகுசனத் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

கிராமப்புறங்களில் உள்ள தபாலகங்களுக்கு நகர் புறங்களில் உள்ள தபாலகங்கள் போல இணையம் தொலைநகல், உள்நாட்டு, வெளிநாட்டு கடுகதி தபால்சேவை ஆகிய வசதிகள் இத் திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-8)

## மாநகரசபை பொன்விழா நிகழ்வு பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 26ம் திகதி கொண்டாடப்படுவதாக இருந்தயாழ். மநகரசபயின் பொன்விழாக் கொண்டாட்டம் நிதிப்பற்றாக்குறை காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். நகர மேயர் அறிவித்துள்ளார்.

அடுத்த மாத இறுதிக்குள் பொன்விழாக் கொண்டாட்டங்கா நடத்தி முடிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-19)

## ஆசிரிய பயிலுநர் சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பாடசாலைகளில் தமது உள்ளக பயிற்சியினை மேற்கொள்ளும் யாழ். கல்வியியற்கல்லூரியின் முதலாம் அணி ஆசிரிய பயிலுநர்களை எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்வியியற் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கல்லூரி பீடாதிபதி கேட்டுள்ளார். (செ-5)

## சலனசித்திரத்தின் திரைப்பட வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சலனச்சித்திர அமைப்பு நடத்தி வரும் திரைப்படம் சம்பந்தமான பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ள முடியாதவர்களுக்கான வகுப்பொன்றை சலனச்சித்திர அமைப்பு ஒழுங்கு செய்துள்ளது.

இவ்வகுப்புக்கள் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் பி.ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (செ-19)

## சமுகம் தருமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரியின் ஆங்கில பாடநெறிக்கு விண்ணப்பித்து தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்றிய பின்வரும் மாணவர்கள் பிறப்புச்சான்றிதழ், கல்விச் சான்றிதழ்களுடனும் அவற்றின் போட்டோ பிரதிகளுடனும் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்வியியற் கல்லூரிக்கு சமுகம் தருமாறு பீடாதிபதி கேட்டுள்ளார்.

கே.எஸ்.தர்சிகா (கோப்பாய்), என்.கர்த்திகா( உடுப்பிட்டி) ஆர்.பாமினி (கரவெட்டி) ரி.சுதர்சனா (அச்சுவேலி) எஸ்.எஸ் சுதர்சினி (திருநெல்வேலி)எஸ்.சர்மிலா (கரவெட்டி) (செ-5)

## இந்தியாவிற்கு

இத்தகவலை செய்தியாளர்ளிடம் தெரிவிக்கையில் இந்தியாவிற்கும் அமெரிக்கவிற்குமிடையில் ஆயுதப் பேரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படுவதாயும் இந்தியாவிற்கானதும் அமெரிக்காவிற்கானதுமான முதலீட்டுக் கொள்கைகள்விரிவடையுமென்றும் தெரிவித்தார். (து)

## பேராசிரியர்
# அமரர் க. கைலாசபதியின் பெருமையும் புகழும்

சொக்கன்

(27.01.2002 ஞாயிறன்று, கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் நடத்திய 'புலமையாளர் அறிமுகம்' நிகழ்வில் வாசிக்கப்பட்ட அறிமுகக் கவிதை)

வெண்பா

சிந்தனையி லேதெளிவு, சீரியஆய் வுத்திறமை
பைந்தமிழை மற்றவற்றோ டொப்பிட்டுத் - தக்த
முறை
மெச்சப் படுங்கீர்த்தி மேதைகை லாசபதிக் (கு)
எச்சம் சிறப்புடைத்தே யாம்

எச்சம் - (எஞ்சி நிற்கும்) புகழ்

விருத்தம்

''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாள்
கைக்கொண்டு தமிழ்க்குடி தோன்றிற்'' றென்றே
தொல்மரபு பேசியோர் மறைந்து போனார்
''தோன்றியமே லைமொழியின் கலைப்பெ ருக்கம்
செல்லரித்த தமிழினுக் குண்டோ'' என்று
சிரித்தவரும் இல்லையின்று தமிழைப் பேணிச்
செல்நெறிஈ தெனக்காட்டிச் சென்ற பேரில்
சீரார்கை லாசபதி ஒருவர் ஆவார்

கவினாரும் மலேசியா விற்பி றந்து
கலைகள்மலி தாய்நாடாம் இலங்கை வந்து
நவநவமாச் சிந்தனையை வளர்க்கும் கல்வி
நலம்பெற்றுக் கலைமாணி யாகத் தேர்ந்து
குவைகுவையாய்க் கதை, கவிதை, நவீனம் கொண்டு
குவிக்கின்ற ஊடகமாய் வெளியாகின்ற
சுவைதேரும் 'தினகரன்' ஆசிரிய ராகிச்
சிறந்தபணி தொடங்கினார் செயலின் வீரர்

படைப்பாளி படித்தோனே என்றிருந்த
பாடத்தைத் தலைகீழாய் மாற்றி மிக்க
திடமுடனே பாட்டாளி மாரை ஊக்கித்
திறமான ஆக்கங்கள் படைக்கச் செய்தார்
''கடையர்இழி சினர்'' இவர்கள் என்ற பேரிற்
கடுஞ்சினங்கொண்டார்களுக்கா தரவை ஈந்தார்
'படைப்பாளி மரபினுக் கடிமை அல்லன்
படியுமிதை' எனப்புதிய பாடஞ் சொன்னார்

பல்கலைசார் பெரதெனியக் கழகம் மீண்டு
பைந்தமிழின் விரிவுரை யாள ரானார்
''செல்வரிவர் தமிழாய்வுச் செல்வர்'' என்றே
சேர்ந்தமா ணாக்கரெலாம் மெச்சக் கற்பித் (து)
அல்களையும் சுடர்விளக்காய் ஆனார் தாமும்
அங்குபெற்ற முதுமாணி யோடு சீமை
செல்லுவார் கலாநிதியாம் பட்டத் திற்காய்ச்
சிறந்த ஒப் பியலாய்வு தனைமேற் கொண்டார்

அல்-(இரவு) இருள் (அறியாமை)

'சங்ககா லம்வீர யுகத்துக் கான
சகாப்த' மென ஆய்வினால் முடிவுகண்டு
அங்கதனைக் கிரேக்கமுதற் சிலவாம் பாஷை
அவற்றுடனே ஒப்பிட்டு நிறுவ லாலே
பொங்குபுகழ்ப் பேராசான் 'தொம்சன்' மெச்சிப்
பரிந்துரைக்கக் கலாநிதிப் பட்டம் பெற்றார்
சங்கையதற் களித்த ஒக்ஸ் போட்டார் தங்கள்
சார்பில்அதை நூலாக வெளியிட்டார்கள்.

'உலகுபுகழ் தமிழாய்வின் மேதை' என்றே
உலகறிஞர் பலர்போற்ற உயர்ந்தோ ராகி
நிலவியஇப் பேராசான் யாழ்ப்பாணத்தில்
நிறுவுபல் கலைக்கழக வளாகத் திற்கே
அலகில்திறத் தலைவராய் அமர்ந்து செய்த
அரும்பணிகள் பலஇவரின் நிலையைப் போற்றி
நலமுணர்பல் கலைக்கழகம் இவர்நா மத்தை
நன்றியொ டோர்மண்டபத்திற் கீந்த தன்றே.

பொதுவுடைமைக் கோட்பாட்டை இறுகப் பற்றிப்
புலமையுடன் அதனுடைய தத்துவத்தை
இதமுறவே விளக்கிக் கட்டுரைகள் ஈந்தார்
இயக்கமதன் தூண்களிலே ஒருவ ரானார்
'எதுவும்நிலை யாய்நில்லா தியங்கிக் கொண்டே
இருக்குமதே அறிவியலின் முடிவெ'ன்
றோர்ந்தவ்
விதிவழியே படைக்கின்ற இலக்கி யங்கள்
மேன்மையொடு சிறக்குமென எடுத்துச்
சொன்னார்.

சங்கச்சான் றோர்கம்பர் குறளை ஈந்த
சகம்புகழும் வள்ளுவர்பா ரதியி னோடு
தற்காலப் படைப்பாளர் படைப்பை எல்லாம்
தக்கபடி ஆராய்ந்து சமூகப் பார்வை
எங்குளதோ எதார்த்தமெங் கென்று தேடி
ஏற்றபடி திறனாய்வு செய்து நூல்கள்
பொங்குபுகழ் தங்கிடவே ஆக்கித் தந்தார்
புதியசிந் தனைகளுக் குரத்தை ஈந்தார்.

நந்தமிழின் வரலாற்றில் நிலையாய்த் தங்கள்
நாமங்கள் பதித்துள்ள இருவர் பேரைச்
சிந்தையிலே நம்மிளைஞர் பதித்தல் வேண்டும்
சிவத்தம்பி, அவருடனே பிறவாத் தம்பி
அந்தமறு புகழாளர் அமர ரான
அவர்கைலா சபதியென் றறிதல் வேண்டும்
ஐந்துதர பத்தாண்டே வாழ்ந்த போதும்
அவர்பெருமை புகழ்சிரஞ் சீவி யாகும்.

# வடக்கு-தெற்கு மக்களிடையே கருத்துக்கள் பரிமாற நடவடிக்கை

## தே.ச-அபிவிருத்தி மைய தலைவர்தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் இதுவரை காலமும் நிலவிவந்த யுத்தம் நிறுத்தப்பட்டு. அரசியல் ரீதியான பேச்சுக்களின் மூலம் தீர்வு காணும் நோக்குடன் வடக்கு தெற்கு பிரதேசங்களில் வாழும் மக்கள் மத்தியில் ஆக்கபூர்வமான கருத்துப்பரிமாற்றத்தை ஏற்படுத்த தேசிய சமாதான அபிவிருத்திமையம் நடவடிக்கை எடுத்துவருவதாக அதன் தலைவர் எம். எஸ். செல்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இவ்விரு பிரதேசங்களிலும் வாழும் மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தையும் பரஸ்பரத்தையும் ஏற்படுத்தும் நோக்குடனேயே இது ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கில் வாழும் மக்கள் 20 வருடகால யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட அவல நிலைகளையும், சொல்லொணாத் துயரங்களையும் தென்பகுதி மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதோடு, தென்பகுயில் வாழும் மக்கள் குறித்து வடக்கு மக்கள் கொண்டிருக்கும் தவறான கருத்துப் பேதங்களைக் களைய வேண்டும்.

இவ்வாறாக இருதரப்பினர் மத்தியிலும் நல்லெண்ணத்தை கட்டியெழுப்புவதன் மூலம் சமாதான முயற்சிகளுக்கான முன்னெடுப்புக்கள் மேலும் வலுவடையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் முன்னோடி நடவடிக்கையாக தெற்கின் மதத் தலைவர்கள், அரசியல் வாதிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், செய்தியாளர்கள் ஆகியோரை வடக்குக் கிழக்குப்பிரதேசங்களுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதோடு அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் வெண்ணெய் திரண்டுவரும் வேளை இச்சமாதான முயற்சிகளிலிருந்து நழுவி விடாது இருப்பதற்காக இருபகுதி மக்களினதும் ஒருமித்த கருத்தை உருவாக்க தாம் பாடுபடப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-8)

## செயற்குழு உறுப்பினர் தெரிவு

(சுண்டுக்குளி)

நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலையத்தின் நடப்பு வருட செயற்குழு உறுப்பினர் தெரிவு அண்மையில் இடம் பெற்றது.

இதன் போது போசகராக வண. பிதா பீற்றர் துரைரட்ணம், தலைவராக பெனடிற் இராசநாயகம் அருள்நாயகம், செயலாளராக பேசுதாசன் ஜெயக்குமார், பொருளாளராகஎலியாஸ் அமலன், விளையாட்டுத்துறைத் தலைவராக அமிர்தநாதன்சுரேந்திரன் ஆகியோர்களும்,

நிர்வாக சபை உறுப்பினர்களாக ஆறு பேர்களும்தெரிவு செய்யப்பட்டனர்.

(செ-110)

## நிர்வாகக் குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

திரைக் கலைச் சங்கங்களின் சம்மேளனமான ''சலனசித்திரம்' நிறுவனத்தின் வலிகாமக் கிளையின் நிர்வாகக்குழுக் கூட்டம் நாளை வியாழக் கிழமை பி.ப 3.30 மணிக்கு ஆரியகுளத்தடியிலுள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (செ-106)

## நாய்கள் இன்று நஞ்சூட்டி அழிப்பு

(மானிப்பாய்)

மானிப்பாய் பிரதேசசபை மானிப்பாய் பட்டின உபஅலுவலக எல்லைக்குள் இன்று புதன்கிழமை கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட உள்ளன.

இந்த அழிப்பு நடவடிக்கை மானிப்பாய் பொது சுகாதாரப் பரிசோதகர் க. வருணநாதன் மானிப்பாய் உப அலுவலகப் பொறுப்பதிகாரி செ. மனோகரன் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ்நடைபெற உள்ளது.

எனவே இன்றைய தினம் மக்கள் தமதுவீட்டுவளர்ப்பு நாய்களைக் கட்டிவைக்குமாறு பொறுப்பதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார். (செ.232)

## வீதியின் குறுக்கே மின்கம்பம் சரிந்து வீழ்ந்தது

(மானிப்பாய்)

நவாலி வடக்கு சோமசுந்தரப் புலவர் வீதியில் உள்ள பழைமை வாய்ந்த மின் கம்பமொன்று நேற்று முன்தினம் இரவு 8 .00 மணியளவில் வீதிக்குகுறுக்கே சரிந்து வீழ்ந்துள்ளது.

இப்பகுதியில் பழைமை வாய்ந்த மின்கம்பங்கள் அகற்றப்படவில்லை.

இவ் வீதியில் இன்னும் பல மின் கம்பங்கள் சரிந்த நிலையில் காணப்படுவதனால் எப்போதாவதுவிழுந்து ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் என அந்த ஊர் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். (செ-232)

## பாடசாலை நிர்வாகமுறைகள் மாணவர் பெற்றோர்க்கு அமைவாக மறுசீரமைப்பு பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளில் உள்ள நிர்வாக முறைகள்யாவும் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் ஆகியோரின் கவனத்திற்கு உட்படுத்தப்படும் வண்ணம் மறுசீரமைக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பு பேராயர் இல்லத்தில் அதிவணக்கத்துக்குரிய நிக்கலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ அடிகளாரை சந்தித்தபோது கல்வித்துறை சம்பந்தமாக கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கல்வித்திணைக்களங்களினாலும் அதன் அதிகாரிகளினாலும் மாணவர் சமுதாயத்தின்கல்வியானது முன்னெடுத்துச் செல்லப்படாது இருப்பதைஅரசாங்கம் கண்டறிந்துள்ளது.

இவ்வாறான அரச அதிகாரிகளினதும் பணிப்பாளர்களினதும் அசமந்தப் போக்கால் சீர்கெட்டுச் செல்லும் மாணவர்களின் நலன்கருதியே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; கிறிஸ்தவ பாடசாலைகளில் உள்ள அதிபர், ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணமாக அங்கு கல்விபயிலும் மாணவர்கள் பலர் பாதிக்கப்படுகின்றனர். இதனைநிவர்த்திசெய்யும் நோக்குடனும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார். (செ-5)

## பொது மக்கள் நலன் கருதி நடமாடும் சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டது

(கொழும்பு)

அரச நிர்வாக பணிகளிலுள்ள அதிகாரிகளினால் பொதுமக்களுக்கு இதுவரை காலமும் இழைக்கப்பட்ட இன்னல்கள் அநீதிகளுக்கு எதிரானதீர்வைப் பெற்றுகொடுக்கும் நோக்குடன் நாடளாவிய ரீதியில் நடமாடும் சேவை ஒன்று பாராளுமன்ற அலுவலகத்தில் நேற்று ஆணையாளர் ஆர். பீ. ரணராஜாதலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரச சேவையில் உள்ள அதிகாரிகள், முகாமையாளர்கள என்போரின் அநீதிகள், இன்னல்கள் என்பவற்றை மக்கள் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள தமது அலுவலகத்திற்கு தெரிவிக்கும்படி நிர்வாக நடவடிக்கைகள்தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நடமாடும் சேவையின் ஊடாக மக்கள் மத்தியில் காணப்படும் இன்னல்கள், குறைகள், என்பவற்றை உடனுக்குடன் நிவர்த்தி செய்து கொடுப்பதே இதன் நோக்கமாகும் எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (செ-8)

## சுயதொழில் செய்பவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்படும்

(கொழும்பு)

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவது போன்று சுயதொழிலில் ஈடுபடுபவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்குவதற்கு சமூக சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வேலை வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகள் தனியே அரசாங்க வேலைகளை மாத்திரம் எதிர்பார்த்திராமல் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

அவ்வாறு சுயதொழிலில் ஈடுபடுபவர்களுக்குஅவர்களது முதுமைக் காலத்தில் ஓய்வூதியம் வழங்கப்படும் எனவும் ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் விமலநாதன் தெரிவித்துள்ளார். (செ-5)

# உத்தம குணங்களுடைய புலமையாளர்களை உருவாக்கிய தெல்லிப்பழை யூனியன்கல்லூரி

பதினெட்டுத் தசாப்தங்களுக்கு மேலான பெருமை மிக்க சரித்திரமும் நீண்ட பிரகாசமான கல்விப் பாரம்பரியமும் உடையது யூனியன்கல்லூரி. அது ஆரம்பம்முதலே அறிவுதொடர்ந்துபிரவாகிக்கும் ஊற்றாக விளங்கி வடவலிகாமத்தைச் செழுமைப்படுத்தி வந்துள்ளது. அர்ப்பணிப்புமிக்க சேவை காரணமாக மாணவர்களாலும் பெற்றோராலும் பெரிதும் மதித்துப் போற்றப்பட்ட பல அதிபர்களும் ஆசிரியர்களும் இக்கல்விச்சாலையை அலங்கரித்து அதனை வளர்த்தெடுத்துள்ளார்கள். இவர்களுள் சமீபகாலத்தவர்களாகிய அமரர் ஐ. பி. துரைரத்தினம், க. பாலசுந்தரம் போன்ற பெயர்கள் எனது உடனடி நினைவுக்கு வருகின்றன. இவர்களதும் இவர்களைப் போன்ற ஏனைய உயர்ந்த உள்ளம் கொண்ட பெரியோர்களதும் ஓய்வற்ற முயற்சியே இக்கல்வி நிறுவனத்தை வந்தடைந்த மாணவர்கள் சிறந்த உத்தம குணங்களுடைய பெரும் புலமையாளர்களாக உருவாகக் காரணமாயமைந்தன.

பல்வேறு பதவிகளில்

இக்கல்லூரியை நாடி வந்த மாணவரிற் பலரும் பேராசிரியர்கள், ஆசிரியர்கள், வைத்திய கலாநிதிகள், பொறியியலாளர்கள் சட்டத்தரணிகள், நிர்வாகிகள், இராஜதந்திரிகள் கணக்காளர்கள், விவசாய நிபுணர்கள், தொழில் நுட்பவியலாளர்கள், அரசியல் வாதிகள் போன்ற பல்வேறு உயர் பதவிகளையடைந்து பிரகாசிப்பதற்குப் பமமான அத்திபாரமாக இக்கல்லூரி அமைந்திருந்ததைக்காணக் கூடியதாகவுள்ளது. இவ்வரிசையில் எனது உடனடி நினைவுக்கு வருபவர் அண்மையில் நடந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞானக் கலாநிதி என்ற உயர்விருது வழங்கிக்

## பேராசிரியர் இ. குமாரவடிவேல்

கௌரவிக்கப்பட்ட பேராசிரியர் கந்தையா குணரத்தினம் ஆவார். பேராசிரியர்கந்தையா குணரத்தினம் 1940 களின் பிற்பகுதியிலும் 1950 களின் முற்பகுதியிலும் இக் கல்லூரியிற் கற்று அரசாங்கத்தால் நடத்தப்பட்டு வந்த உயர்தரப் பாடசாலைச்சான்றிதழ்த் (HSC) தேர்வில் 1953 ஆம் ஆண்டில் அகில இலங்கையிலும்முதற் பிரிவிற் சித்தியெய்திய இருமாணவர்களில் ஒருவராக விளங்கியவர். இக்கல்லூரியிலிருந்து 1954 இல் கொழும்பு இலங்கைப் பல்கலைக் கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட பேராசிரியர் குணரத்தினம் 1958 ஆம் ஆண்டில் பௌதிகவியலில் முதற் பிரிவில் தேறிப் பல பரிசில்களைத் தனதாக்கிக் கொண்டதுடன் இலண்டன் பல்கலைக்கழகத்தின் இம்பீரியல் கல்லூரியில் பட்டப் பின் படிப்பு ஆய்வுகளில் ஈடுபட்டு 1963ஆம் ஆண்டில் இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தையும்இம்பீரியல் கல்லூரியில் DIC பட்டத்தையும் பெற்றார். அவரால் கலாநிதிப்பட்டஆய்வின் போது வடிவமைக்கப்பட்ட கணனிக் கணிதமுறை நுட்பங்களும்படிமுறைகளும் கேம்பிறிட்ச் பல்கலைக் கழகத்தைச்சேர்ந்த F.J வைன்(இப்போFRS) என்பவரால் இக்காலத்தில் மிகவும் பிரபல்யம் பெற்று விளங்கும் சமுத்திரத்தரைகளின்பரவலும் கண்டங்களின் நகர்வும் பற்றிய ஆய்வுகளில் பெரிதும் உபயோகப் படுத்தப்பட்டன. 1975 ஆம் ஆண்டு மார்ச்மாதத்தில் இங்கிலாந்தில் வெளிவரும் மான்செஸ்ரர் கார்டியன் என்ற பத்திரிகையின் விஞ்ஞானப் பகுதி ஆசிரியருக்கு வழங்கியவொரு செவ்வியில் பேராசிரியர் வைன் பேராசிரியர் குணரத்தினம் அவர்களை 'உண்மையிலேயே பெருந்திறமைமிக்க இலங்கையர் (a really brilliant Ceylonese)'' என அழைத்துப் புகழாரம் சூட்டியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. நாட்டுப் பற்றும் இனப்பற்றும் மிக்க பேராசிரியர் குணரத்தினம் கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களில் முதநிலை விரிவுரையாளராக, பேராசிரியராக, விஞ்ஞான பீடாதிபதியாக, உபவேந்தராகப் பணியாற்றி இந் நாட்டினதும் எம்மினத்தினதும் உயர் கல்வி வளர்ச்சிக்கும் ஆய்வுத்துறைக்கும் பல்கலைக்கழக நிர்வாக மேம்பாட்டிற்கும் ஆற்றிய போற்றத்தகு பங்களிப்புகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இந் நாட்டில் சேவையாற்றிக்கொண்டேபல சர்வதேச விருதுகளையும் பரிசுகளையும் பட்டங்களையும் பெற்றுக்கொண்ட இவரது உயர்வுக்கு இக் கல்லூரியில் இடப்பட்ட அத்திபாரமே காரணமாதலால் இக்கல்லூரிச் சமூகம் அவரைப் பற்றிப் பெருமையடையலாம். பேராசிரியர் குணரத்தினத்தின் மாணவன் என்ற முறையில் நானும் பெருமையடைகிறேன். இக்கல்லூரி மாணவர்களுக்கு இத் தகவல்கள் ஒரு உந்து சக்தியாக அமையும் என்பதனாலேயே இவற்றைக் கூற முற்பட்டேன்.

புடமிடப்பட்டவர்கள்

ஹேலியின் வால்வெள்ளி தோன்றும் காலங்களை நுணுக்கமாகக் கணித்து உலகப் புகழ் பெற்ற விண்ணியலாளர் அலன் ஏபிரகாம், மகாஜனக் கல்லூரி ஸ்தாபகர் பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை, ஈழத்தமிழ் சமுதாயத்தின் தந்தை எனப் போற்றப்படும் அமரர் சா. ஜே. வே. செல்வநாயகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர் போன்ற பலரும் இக் கல்லூரியில் புடமிடப்பட்டவர்கள் என்பதை அறிந்து மனமகிழ்கிறேன். யாழ் குடாநாட்டில் நிலவும் யுத்த சூழ் நிலையால் அதிகளவு பாதிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களுள் யூனியன் கல்லூரியும் ஒன்று. 1990 முதல் பல இடப் பெயர்வுகளுடன் தற்காலிக நிலையங்களில் இயங்கிவரும் இக் கல்லூரிக் எதிர் கொண்ட பல்வேறு சவால்களை இக்கல்லூரிச் சமூகத்தினர் மிகவும் மெச்சத்தக்க முறையில் வெற்றி கொண்டு கல்லூரியை வளர்ச்சிப்பாதையில் இட்டுச் செல்வதைக் கண்டு பூரிப்படைகிறேன். 1996ஆண்டு முதல் அதிபராகப் பணிபுரியும் புண்ணியசீலன் இப்புகழ் பூத்த கல்லூரியின்பெருமையையும் உயர்நிலையையும் மங்கவிடாது காப்பாற்றி மேலும் பிரகாசமடையவைக்கச் சங்கற்பித்துநிற்பதைநாம்காணக் கூடியதாகவுளது. 1990 இன் பின் தற்காலிக நிலையங்களில் இயங்குகின்ற காரணத்தால் ஏற்படும் இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டு இக்கல்லூரி தேசிய மட்டத்திலும் மாவட்டமட்டத்திலும் ஈட்டிய, ஈட்டிவருகின்ற சாதனைகள் இதற்குச் சான்றுகளாயமைகின்றன. இதற்காக அதிபர் அவர்கள் பெரிதும் பாராட்டப்படவேண்டியவர். புண்ணியசீலன் தமது கல்லூரி மாணவர்எங்கு போட்டிகளில் பங்குபற்றினுஞ் சரி அங்கு தாமே நேரில் பிரசன்னமாகியிருந்து மாணவர்களை ஊக்குவிக்கும்பண்புடையவர் எனப் பலரும் கூறக் கேட்டுள்ளேன். இத்தகுபண்பு படைத்த அதிபரின் வழிநடத்தலின் கீழ் இக்கல்லூரி வருங்காலசந்ததியினருக்குஒருகலங்கரை விளக்காகத் திகழும்என்பதில் எதுவித ஐயமுமில்லை. இக் கல்லூரிக்கு செல்வாக்குமிக்க பழையமாணவர் அமைப்புகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருக்கின்றன. கல்வித் துறையில்ஏற்பட்டுவரு மாற்றங்களையும் சவால்ளையும்எதிர்கொள்ளக்கூடியவகையில் இக்கல்லூரிதன்னைத் தயார்செய்துகொள்ளபழைய மாணவர்கள் பெரும் பங்களிப்பு செய்யவேண்டியது அவசியம்.

---

வட-கிழக்கு யுத்தத்திற்கு

# செலவிடப்படும் ஒவ்வொருரூபாவும் அபிவிருத்திக்கு செலவிடப்படும்

### ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் நடைபெறும் யுத்தத்திற்கு பயன் படுத்தப்படும் ஒவ்வொரு ரூபாவையும் நாட்டின்அபிவிருத்திக்குப் பயன்படுத்த வேண்டுமென ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் தெரிவித்துள்ளார்.

யுத்தத்திற்கு முடிவு கட்டுவதன் மூலம் இலங்கையை தெற்காசியாவில் சகலவளங்களும் கொண்ட ஒரு நாடாக ஆக்குவததே புதிய அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இந்தநல்ல நோக்குடனேயே இனப்பிரச்சினைக்கான உரிய தீர்வைக் காண்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை பேருவல தொகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர்இம்தியாஸ் பொதுமக்களைச் சந்தித்து உரையாடும் போதே மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அமைதி சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முற்போக்கு சிந்தனையுடன் செயற்பட்டு வருகிறார். எமது ஐக்கிய தேசிய முன்னணிஆட்சியில் இலங்கையின் இனப்பிரச்சினைக்குசுமுகமாக ஒரு தீர்வு கிட்டுமென தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். (செ-5)

## யாழ். குடாநாட்டிற்கு 24 மணி நேரம் மின்சாரம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

யாழ். குடாநாட்டிற்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் மின்சாரசபை அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின்னர் அவர் இதனைத் தெரிதுள்ளார்.

இப் பேச்சுவார்த்தையின் போது யாழ். குடாநாட்டிற்கு 24மெகாவோட்ஸ் மின்சாரம் தேவைப்படுவதாகத் தெரிவித்ததாகவும் இதற்கு ஏற்றவாறு மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுப்பதாக மின்சாரசபை அதிகாரிகள் உறுதிமொழி வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை காங்கேசன் துறையில் எரிபொருளைச் சேமித்து வைப்பதற்கு பாரிய தாங்கிஒன்றை அமைப்பதற்கு காணி ஒன்று ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆராயும் பொருட்டு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத்ஜெயவர்த்தனா விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-5)

## பாடசாலை நூலகங்களுக்கு தளபாடங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை நூலகங்களுக்கான தளபாடங்களும் உபகரணங்களும் யாழ் கல்வி வலயத்திற்கு நேற்று லொறிகள் மூலம் காங்கேசன் துறைமுகத்திலிருந்துகொண்டு வரப்பட்டுள்ளன.

போதிய தளபாடங்கள் உபகரணங்கள் என்பன இல்லாது இதுவரை இயங்கி வந்த பாடசாலை நூலகங்களுக்கு விரைவில் அவை வழங்கப்படவுள்ளதாக மேலதிக கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (எ-9)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்பட்டு வரும் ''முரண்பாடுகளைத் தீர்த்தல்'' தொடர்பானகருத்தரங்குத் தொடரில் இவ்ஆண்டுக்கான கருத்தரங்குத் தொடர் இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்தியமகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (செ)

---

யாழ். மாவட்ட எம். பிக்களுக்கு

# சிறுவர் பாராளுமன்றத்தின் தீர்மானம் அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

சிறுவர்பாதுகாப்பு நிதியத்தினால் சிறுவர் உரிமைகள தொடர்பாக ''சிறுவர் பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் யாழ். மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இந்த சிறுவர் பாராளுமன்றம் இடம்பெற்றது. இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் யாவும் வட-இலங்கைப்பத்திரிகையாளர் சங்கத்தின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதென சிறுவர் பாதுகாப்பு நிதிய அலுவலர் ஒருவர் தெரிவித்துள்ளார். (வ)

# இராசி பலன்

30-01--2002
(தை 17, புதன்)
துதியை ந. இ 12. 48வரை
மகம் வை 5-00 வரை
ராகுகாலம். 12. 36 -2. 06
சுபநேரம் .5.06-6.36

**மேடம்**
தாழ்ந்த சுபாவம், வியாபாரநன்மை, உடல் நலக் குறைவு. முயற்சி தாமதம்

**இடபம்**
ரோக பயம்தன்நம்பிக்கைக் குறைவு, குடும்ப நன்மை. புதிய திருப்பம்.

**மிதுனம்**
அன்னியர் சந்திப்பு, இனிய சம்பவம், தனவரவு, நல்ல முயற்சி,

**கடகம்**
மாதர் நட்பு, கௌரவக் குறைவு, காரிய தாமதம், பொருள் விரயம்.

**சிங்கம்**
நல்லமுயற்சி, போசனசுகம் காரிய அனுகூலம். தனவரவு

**கன்னி**
காரிய அலைச்சல், உணர்ச்சிவசப்படல், பிரயாணம், சுபசெலவு-

**துலாம்**
மனமகிழ்ச்சி, குடும்பநன்மைகுதனலாபம், முயற்சி கைகூடும்

**விருச்சிகம்**
கடின உழைப்பு, தூரதேச செய்தி, தொழில் நன்மை காரியஜெயம்.

**தனுசு**
ஆன்றோர்மதிப்பு, அச்சமானநிலை, உடல்நலக் குறை, பிரயாணம்.

**மகரம்**
போசனசுகம், உடல்வியாதி எதிர்பாராத பிரச்சினை, முயற்சி தாமதம்

**கும்பம்**
சுவாரஸ்யம், காரியம் கைகூடும், திடீர்பயணம், பொருள்சேர்க்கை,

**மீனம்**
செய்தொழில் மேன்மை, காரியம் நிறைவேறும், சந்தோசம், உடல் நலம்.

(பழைய நேரட்டி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# மீனவரின் மறியல் போராட்டம் வெற்றியடைய ஆதரவு வழங்குவோம்

### யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு மீனவர்களின் மறியற் போராட்டத்துக்கு தமது பூரண ஆதரவை வழங்கத்தயாராக இருப்பதாக, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஒன்றியம் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

போரினால் கடந்த பன்னிரண்டு வருடங்களுக்குமேலாக நடைமுறையில் இருந்து வரும் பயங்கரவாதத்தடைச் சட்டம், கடல்வலயத்தடைச் சட்டம் என்பவற்றினால் வடகிழக்கில் தமிழ்மக்களின் பொருளாதாரம் முழுமையாக சீரழிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1995ம் ஆண்டு யாழ். குடாநாடு அரசபடைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர்குடாநாட்டில்வாழும் லட்சத்திற்குப் மேற்பட்ட மீனவர்கள் தொழிலுக்காக கடலில் கால்பதிக்க முடியாதளவுக்கு, கடல்வலயத்தடை. இறுக்கப்பட்டு. இராணுவக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் கடற்றொழில் செய்து வாழ்ந்து வந்த லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தமது நாளாந்த வருமானத்தைஇழந்து, அகதிகளாக வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு, கடல்வலய தடை போன்றவற்றால் தொடரும் இம்மக்களின் அவலவாழ்விற்கு புதிய அரசின் ஆட்சியிலாவது விமோசனம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் புதிய அரசு பதவி ஏற்று இரண்டு மாதங்கள் பூர்த்தியாகவுள்ள நிலையிலும் கூட மீனவர்கள் சுதந்திரமாகதமது தொழிலை விரும்பிய நேரம், விரும்பிய தூரம் சென்றுமேற்கொள்ள முடியாதுள்ளது.

குடாநாட்டில் பொருட்களின் விலையேற்றம் இம்மக்களை மேலும் வாட்டி வருகிறது. இந்நிலையில் கடற்றொழில் சங்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள மறியல் போராட்டம் நியாயமானதே. இப்போராட்டம் வெற்றியடையும்வரை எமது ஆதரவினை வழங்கத்தயாராகவுள்ளோம் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மீன் பிடித் தடையை அரசு முழுமையாகநீக்கவேண்டும்

### விநாயகமூர்த்தி எம். பி

(கொழும்பு)

யாழ் குடாநாட்டில் மீனவர்கள் மேற்கொள்ளும் மறியல் போராட்டத்துக்கு தானும் தமிழ்க்காங்கிரசும் மற்றும் தமிழ்காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு வழங்குவதாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான அ.விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில்

யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்தொழிலாளர்கள்இன்று யாழ் சச்சேரிமுன்பாகமறியல் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த மறியல் போராட்டத்தை நானும் எனது கட்சியான அகிலஇலங்கை தமிழ் காங்கிரசும் ஏனைய தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் தமிழ் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரிக்கின்றோம்.

இவ் விடயம் குறித்து பிரதமர் பாதுகாப்பமைச்சர் மற்றும் அமைச்சர் களான ஜீ. எல். பீரிஸ் மற்றும் மிலிந்த மொறகொட ஆகியோருடன் தொடர்பு கொண்டு பேசியதுடன் மகஜரும் அனுப்பியுள்ளேன்.

அரசினாலும் விடுதலைப் புலிகளினாலும் யுத்த நிறுத்தமும் மோதல் தவிர்ப்பும் கடைப்பிடிக்கப் படுகின்ற போதிலும் கூட மீன்பிடித் தடை இன்னமும் தொடர்வதற்கு எவ்வித நியாயமுமில்லை

வடமாகாணத்தில்இருக்கும் மீனவர்கள் எவ்வித கட்டுப்பாடுகளும் தடையுமின்றி மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்படவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மீனவர்களின் போராட்டத்திற்கு 47 மனிதநேய அமைப்புகள் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மீனவர்கள் மேற்கொள்ளும் மறியல் போராட்டத்துக்கு பூரண ஆதரவையும் பங்களிப்பையும் வழங்குவதாக யாழ் மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ஒன்றியச் செயலாளர் அ.கி. சிவசுப்பிரமணியம் அவர்களால் செய்திக் குறிப் பொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்து நலன்புரி நிலயங்களில் வாழும் மக்கள் ஒருபுறம்' சொந்த இடத்தில் இருந்து வாழ்வா? சாவா? என வாழும் மக்கள் மறுபுறம். இப்படி பல இன்னல்களுக்கு மத்தியில் சொந்த இடத்தில் சொந்தமான மீன் பிடித் தொழிலை செய்வதற்கு நேரக் கட்டுப்பாடு, தூரக் கட்டுபாடு. தடை போன்றவற்றை நீக்கும்படி அரசியல்வாதிகள், அமைச்சர்கள முன்னைய அரசு, தற்போதைய அரசு, மற்றும் அரசஉயர்அதிகாரிகள் போன்ற பலரிடமும் பலமுறை தங்களது கோரிக்கைகளை மீனவர்கள் முன்வைத்தனர்.

இவற்றிற்கு எந்தவிதமான சாதகமான பதிலும் கிடைக்காததினால் மீனவர்கள் தங்கள் வாழ்விழக்கும், வறுமையை போக்கவும் வேறுவழிஇல்லாத நிலையில் போராடவேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டனர் இன்று தொடக்கம் தமது நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து சாதகமான, தீர்க்கமான பதில் கிடைக்கும் வரை. தொடர்ச்சியாக நடாத்தும் மறியல் போராட்டத்திற்கு ஆதரவையும் பூரண பங்களிப்பையும் 47 மனிதநேய அமைப்புக்களின் சார்பில் யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் வழங்குகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# யாழ். செயலகத்திற்கு...

இந்நிலையில் யாழ் செயலகம் முன்பாக மறியல்போரை ஆரமபிக்கும கடற்றொழிலாளர்களுக்கு பல்வேறு மனிதநேய அமைப்புகளும கூட்டுறவாளர்கள் என்றரீதியிலும வடமராட்சி கிழக்கு தீவகம், ஆகிய கடற்றொழிலாளர் சங்கங்களும், யாழ். மாவட்ட அரசார்பற்ற நிறுவனங்களின் இணையம, யாழ். மாவட்ட உழைக்கும் மகளிர் அபிவிருத்திச் சங்கம், வடமராட்சிவர்த்தக சங்கங்களின் இணையம், மற்றும் வலிகாமம் கடற்றொழிளாளர் சங்கம் ஆகியன தமது ஆதரவினை வழங்கியுள்ளன.

இப்போராட்டம் குறித்து வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் செய்திக்குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது. இதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கடந்த பல வருடங்களாக எமது கடற்றொழிலாளர்கள் அனுபவித்து வரும்அவலங்கள் சொல்லில் அடங்கா! இந்த அவலங்களிலிருந்து எமது மக்களை விடுவிப்பதற்கான பல வகையானபோராட்டங்களை சாத்வீகமான முறையில் நடாத்தி வந்தோம். எமது தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட குறைபாடுகளை விரிவாகவும், மிகவும் துலக்கமாகவும் சுட்டிக்காட்டி அமைச்சர்களுக்கும் அமைச்சின்செயலாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் கடிதங்கள் அனுப்பிவைத்தோம். இந்த நடவடிக்கையினால் எள்ளளவும் பயனேதும் ஏற்படவில்லை. ஏற்படக்கூடிய சாத்தியம் கூடத் தென்படவில்லை.

என்றாலும் புதிய அரசு ஆட்சி அமைத்தால் எமக்கெல்லாம் விமோசனம் கிடைக்கும் என எண்ணிக் காத்திருந்தோம். புதிய அரசு ஆட்சிக் கட்டிலேறியது. ஆட்சியமைத்து இன்றுடன் ஐம்பதாவது நாளுமாகிவிட்டது. எமது பிரச்சினை தீர்வதற்கு வாய்ப்போ வளமோ இதுவரை தெரியவில்லை. எனினும் புதிய அரசின் பிரதமர் கடற்றொழிலமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு, அமைச்சுக்களின் செயலாளர்கள் அனைவருக்கும் எமது தொழிலாளர்களின் பிரச்சினைகளை குறித்துக் கடிதம் அனுப்பி வைத்தோம்.

அதுமட்டுமல்ல இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் அவர்களை நேரில் சந்தித்து கலந்துரையாடினோம் இதனையும் விட தைப்பொங்கல் நன்னாளன்றுபுனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சரைச் சந்தித்துஎமது மக்களின்குறைபாடுகள அனைத்தையும் விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறினோம்; என்று இன்றுவரை எங்கள் பிரச்சினைகள் எதுவும் தீர்ந்தபாடில்லை.

வறுமையின் கோரப்பிடியில் சிக்குண்டு வாழ்வதா? அல்லது சாவதா? என்ற எண்ணப்பாட்டில்ஏங்கிவாழ்கின்ற எமது மக்களின், கடற்றொழிலாளர் சங்கங்கள் அனைத்துத்ஒன்றிணைந்து19.1.2002 சனிக்கிழமை வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர்கூட்டுறவுச் சங்க மண்டபத்தில், நடாத்திய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம்தான் 30-01-2002 புதன்கிழமை யாழ். கச்சேரி முன்பாக மறியற்போர் செய்வதென்ற முடிவு,

இப்போராட்டத்தை யாழ். மாவட்ட ரீதியில் அனைத்துக் கடற்றொழிலாளர்களும் ஒன்றிணைந்து நடாத்தவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது எமது தொழிலாளர்கள் சுதந்திரமாக எவ்வித தடைகளுமின்றி தொழில் செய்ய அனுமதி கிடைக்கும் வரை தொடர்ந்து பகல் இரவாக மறியற் போராட்டம் செய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது. எமது கடற்தொழிலாளர்கள் இதுவரை காலமும் அனுபவித்த துன்பதுயரங்களே இவ்வகையான முடிவினை எடுக்கத் தூண்டியது.

பாதுகாப்புக் காரணங்களைச் சுட்டிக்காட்டியே எமது மக்களைக் கொடுமைப்

(2-ம் பக்கம் பார்க்க)

# ஆட்சி மாறியும் மீனவர்களின் அவல வாழ்வுக்கு முடிவில்லை

### ஈ. பி. டி. பி அறிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மீனவசமூகத்தைச் சேர்ந்த மக்கள் பகிரங்கமாக வெளிப்படுத்தி நிற்கும் உணர்வுகளுக்கு ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி மிகுந்த முக்கியத்துவம் அளிக்கின்றது கடற்தொழிலையே முழுமையாக நம்பியிருக்கும் மீனவ மக்களின் வாழ்க்கைநிலைமைகள் கடந்த காலபோர்ச்சூழல்கள் காரணமாக மிகவும மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது குடாநாட்டின் மீனவர்களது வாழ்க்கை நிலைமைகள் பற்றி உன்னிப்பாக கவனிக்கும் எவரும் கண்ணீர் சிந்தாமல் இருக்க முடியாது. இதனால் இம்மக்கள் பகிரங்கமாக வெளிப்படுத்தும் உணர்வுகளுக்கு நாம்மிகவும் முக்கியத்துவம் அளிக்கின்றோம்.

இவ்வாறுமீனவர்கள்இன்று முதல் மேற்கொள்ளும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஈ.பி.டி.பி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

ஆட்சிமாற்றம்ஏற்பட்டால் தமது அவலவாழ்வுக்கு முடிவு வரும் எனக்கருதியஇம்மக்கள இன்று நிவாரணங்கள் கூட கிட்டாத நிலைமைக்கு தள்ளப்பட்டிருப்பது மிகுந்த மனவேதனைக்குரியதாகும் போர் நிறுத்தமும் மோதல தவிர்ப்பும் அமுல் படுத்தப்பட்டு வரும் இன்றைய சூழலிலாயினும் சுதந்திரமாக கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு வழி வகுக்கப்பட வேண்டும்.

மக்களின் வாழ்க்கைத் தரத்தைமேம் படுத்தும் வகையில் நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் அரசாங்கம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் மீனவ மக்களின் வாழ்க்கை நலன்கள் தொடர்பாகவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

சட்டவிரோத அல்லது அரசாங்க விரோத சம்பவங்கள இடம்பெறலாம் என்ற சந்தேகத்தின் காரணமாக பொது மக்கள் பாதிப்புக்களுக்கு உள்ளாகுவதை அரசாங்கம் தொடர்ந்தும் அனுமதிக்கக் கூடாது என்பதே எமது வேண்டுகோளாகும் இவ்வகையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மீனவசமூகத்தினர் பகிரங்கமாக வெளிப்படுத்தி வரும் கோரிக்கைகளுக்கு நாம் பூரணமான ஆதரவைத் தெரிவித்துக் கொள் கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# மட்.கல்வியியல்கல்லூரிக்கு தெரிவான யாழ். மாணவர் விபரம் வெளியானது

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்புக் கல்வியியல் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்டுளளயாழ். மாவட்ட மாணவர்களின் விபரம் வெளியாகியுள்ளது.

இம்மாணவர்கள் தமது அனுமதிக்கடிதத்தினை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியுமென்று அறிவிக்கப்பட்டுளது.

தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் விபரம் வருமாறு:

## ஆரம்பநெறி

எஸ். திருச்செல்வம் பலாலி வடக்கு கொடிகாமம், ஆர். சிவதர்சினி, சுன்னாகம். ஏ. சுமதி வெடி அரசன் வீதி காரைநகர், கே. ராஜேஸ்வரன் கண்டிவீதி மடத்தடி கொடிகாமம், பி. மதிவண்ணன் புன்னாலைக்கட்டுவன் தெற்கு கெ. சுமித்திரா புத்தூர், ஜீ. ரேவதி ஆறுமுகம் ஒழுங்கை நுணாவில், கே. சுபாஜினி 193 மூத்த விநாயகர்வீதி நல்லூர், எஸ். ராஜசுலோசனா கைதடி தெற்கு, கே. வதனா கொக்குவில் கிழக்கு, எம். நளினரஞ்சினி சுழிபுரம் கிழக்கு, பி. நேசமலர் காளிகோவிலடி காரைநகர், ரி. கலையரசி பண்ணாகம், கே. சுஜிதா சிறுப்பிட்டி தெற்கு, ரி. ரஞ்சிதா சமரபாகுவல்வெட்டித்துறை, சர்மிளா வட்டுக்கோட்டை ரி. சங்கீதா கோப்பாய் வடக்கு, ரி. முத்துராசன் பண்ணாகம் தெற்கு.

## முதல்மொழி

வி. சற்குணராஜா காரைநகர், இ. என். வில்சன் 18 றக்காறோட்சுண்டுக்குழி, ரி. நிமலன் தம்பசிட்டி புலோலி மேற்கு, கே. கையோமார் சுருவில் வீதி ஊர்காவற்றுறை, எல். நிசாந்தன் இளவாலை வடக்கு, எஸ். யோகசெல்வம் இமயாணன் உடுப்பிட்டி.

## சமூகக்கல்வி

எஸ். காயத்திரி புலோலி மத்தி, என். நந்திஸ்வரன் சுழிபுரம் மத்தி, கே. சுகன்யா வீரபத்திரர் கோவிலடி சிறுப்பிட்டி, கே. சயந்தன் 401, கலைமகள் வீதி, அரியாலை, W. V. V. தினேஸ் 18 டச் வீதி உடுவில்.

## தொழில்நுட்பம்

ஆர். செல்வகுமார் ஏழாலை மத்தி. (இ)

## இன்று ஒரு தகவல்

# அளவுக்கு மிஞ்சினால் ஆபத்து

அசடு அண்ணாசாமி என்று ஒருவர் இருக்கிறார். அவர் அசட்டுத்தனமாக ஏதாவது செய்து கொண்டே இருப்பார். உடம்பு அசதியாக இருகிறதென்று டாக்டரிடம் போனார். டாக்டர் இவர் உடம்பைப் பரிசோதித்துப் பார்த்தார். சத்துப் பற்றாக் குறையாக இருந்தது. அதற்குத் தேவையான விற்றமின் மாத்திரையை எழுதிக் கொடுத்தார். ''இதில் 30 மாத்திரைகள் வாங்கிக் கொள்ளுங்கள் தினம் ஒன்று சாப்பிட்டுக் கொண்டு வாருங்கள் சரியாகிவிடும் என்றார். ''டாக்டர், நான் ஒரு யோசனை சொல்லலாமா உங்களுக்கு? என்றார் இவர் ''சொல்லுங்கள்'' என்றார் அவர். இந்த 30 மாத்திரையை எதற்காக 30 நாள் சாப்பிடச் சொல்கிறீர்கள். ஒரு நாளில் சாப்பிட்டுவிட்டால் உடனே குணமாகி விடாதா? என்றார். இது தான் அசடு அண்ணாசாமி!

அதன் பின் அந்த டாக்டர் எச்சரிக்கையாகிவிட்டார். 30 மாத்திரையையும் தான் வாங்கி வைத்துக் கொண்டு தினம் ஒன்று ஒன்றாக அந்த ஆசாமியிடம் கொடுத்துக் கொண்டு வந்தார். இல்லையென்றால் விஷயம் விபரீதமாய் விடும் என்பதைப் புரிந்து கொண்டார். இந்த அண்ணாசாமியைப் போல் நினைக்கிறவர்கள் நம்மிலும் பலர் உண்டு. அவர்களுக்காகத்தான் இன்றைய தகவல். சத்து மாத்திரைகளென்று சிலர் சாப்பிடுகிறார்களே அதை அதிகமாகச் சாப்பிட்டால் அதிகமாக உடம்பில் சத்து சேரும் என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது சரியில்லை.

சத்து மாத்திரையை தேவைக்கு அதிகமாக சாப்பிட்டால் தேவையில்லாத பல தொந்தரவுகள் வந்து சேரும். அதனால்ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். டாக்டரைக் கேட்காமல் நாமாக வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கக் கூடாது. விற்றமின் D இருக்கிறதல்லவா இதனை அதிகமாகச் சாப்பிட்டால், அதன் காரணமாகவும் அதனால் ஏற்படுகிற இரத்த கல்சிய அதிகரிப்பு காரணமாகவும் பல உடல் கோளாறுகள் வந்து விடும். விற்றமின் Dயை ஒருவர் ஒரு நாளைக்கு 4000 யூனிட் அளவுக்கு சாப்பிடுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவருக்கு உடல் அசதி, மனச் சோர்வு; மூளைக் குழப்பம், குமட்டல் வாந்தி, பசி இன்மை, மலச் சிக்கல், அதிக சிறுநீர்போக்கு சிறுநீர் குழாய் தந்துகிகள் பாதிப்பு இதயத் துடிப்பு சீரின்மை ஆகிய தொந்தரவுகள் வந்து விடும். விற்றமின் D காரணமாக உடம்பில் கல்சியம் 13 மில்லிகிராம் அளவுக்கு [illegible] அதிகரித்து விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள் கல்சியம் கல் உண்டாகிவிடும். சிறு நீரகம், நுரையீரல், இருதயம் இரத்தக் குழாய், தோல் என்பவற்றிலெல்லாம் உண்டாகிவிடும். 400 யூனிட் விற்றமின் D சில சமயம் ஒவ்வாமை காரணமாக உடம்பு வலி, வயிற்றுவலி ஆகிய தொந்தரவுகளை ஏற்படுத்திவிடும். விற்றமின் D 18 மில்லியன் அளவுக்கு போய்விட்டால் உயிருக்கே ஆபத்து.

அடுத்தது விற்றமின் A அடங்கிய மருந்துகளைக் குழந்தைகளுக்கு சாதாரணமாகக் கொடுக்கிறோம், கடல் மீன், கல்லீரல் ஆகியவற்றையெல்லாம் தொடர்ந்து சாப்பிடுகிறவர்களுக்கும் விற்றமின் A உடம்பில் அதிகமாய் விடும். இதனால் வயிற்று வலி, குமட்டல், வாந்தி, தலை வலி, மயக்கம், சோம்பல், கண் நரம்பு- உறைவீக்கம், குழந்தையின் உச்சிப்பள்ளம் வீக்கம், தோல் உரிதல் போன்ற தொந்தரவுகள் வந்துவிடும்.

ஒரு நாளைக்கு 40,000 யூனிட் வீதமாக ஒருவர் விற்றமின் A ஐ பலநாட்கள் சாப்பிட்டுக்கொண்டே வந்தால் எலும்புவலி, மூட்டுவலி, எலும்புகளில் அதிகவளர்ச்சி, முடி உதிர்தல், உதடு, வாய் வரட்சி, பசியின்மை, உதடு வெடிப்பு குறைந்த அளவு காய்ச்சல், எடை இழப்பு, கல்லீரல், மண்ணீரல் வீக்கம் எல்லாம் வந்துவிடும். விற்றமின் E அதிகமாகச் சாப்பிட்டால் உடல் அசதி, ஜீரண மண்டல தொந்தரவு, தலை வலி, அதிக இரத்த அழுத்தம் எல்லாம்வரும். விற்றமின் K. அதிகமாகச் சாப்பிட்டால் கர்ப்பிணிப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் மஞ்சள்காமாலை வரலாம். விற்றமின் C அதிகமானால் உடம்பில் B 12 விற்றமின் குறைபாடு ஏற்பட்டு, சிறு நீரகத்தில் ஆக்சலேட் கற்கள் உற்பத்தி ஆகலாமாம்.

இரும்புச்சத்து மருந்து, துத்தநாகச்சத்து மருந்துகளை அதிகமாகச் சாப்பிட்டாலும் நிறைய தொந்தரவுகள் வந்து விடும், ஆதலால் எந்த சத்து மாத்திரையாக இருந்தாலும், மருந்தாக இருந்தாலும், உங்கள்பாட்டுக்கு அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டுவிட்டுக் கஷ்டத்தை விலை கொடுத்து வாங்கிக் கொள்ளாதீர்கள் - நமது அசடு அண்ணாசாமி மாதிரி: அவருடைய அசட்டுத்தனத்துக்கு இன்னொரு உதாரணம் கூட உண்டு! அவரிடம்ஒருதடவை ''தினம் 8 டம்ளர் தண்ணீராவது குடியுங்கள்!'' என்று டாக்டர் சொன்னார்..... ''தினம் 5 டம்ளர் தண்ணீர் தான் என்னால் குடிக்க முடியும்'' என்றார் ''ஏன்?'' என்றுகேட்டார் டாக்டர். ''எங்கள் வீட்டில் ஐந்து டம்ளர் தானே இருக்கிறது'' என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சமாதானப்பேச்சு தடைப்படுமாயின் புலிகளின் தடையை நீக்கலாம்!

## மாதம்பாகம தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் உள்ள பயங்கரவாதப் பிரச்சினைக்காக தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பை அந்நாடுகள் தடை செய்ததே ஒழிய ஜே.வி.பியோ, சிஹல உறுமயவோ கேட்டுக் கொண்டமைக்காக அல்ல என வணக்கத்திற்குரிய பண்டித மாதம்பாகம அஸ்சஜிதேரர் தெரிவித்துள்ளார்.

சர்வமத சமாதான அமைப்பின் நிறைவேற்றுச் செயலாளரான வணக்கத்திற்குரிய பண்டித மாதம்பாகமஅஸ்சஜி தேரர் மேலும் தெரிவிக்கையில்,

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு புலிகள் மீதான தடை முட்டுக்கட்டையாக இருந்தால் அத்தடையைஅரசு நீக்குவதில் தப்பிதம் எதுவுமில்லை. எனினும் இத்தடை நீக்கம் தொடர்பாக அரசு எதிர்க்கட்சிகளுடன் ஆலோசனை செய்வது நல்லது.

பொதுஜனஐக்கியமுன்னணி அரசுக் காலத்திலும் 23 அமைப்புகள் ஒன்று சேர்ந்து இத்நகைய கருத்தையே அரசுக்கு அறிவித்திருந்தோம். அதனையே ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் அறிவித்துள்ளோம் என்று கூறினார். (வ)

## பொ.ஐ.மு. ஆதரவாளர்கள் மீதான வன்முறைகளை அரசு உடன் நிறுத்த வேண்டும்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மீது, கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறைகள் உடனடியாக நிறுத்தப்படாவிட்டால் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு தாம் ஆதரவு வழங்கப்போவதில்லையென்று பாராளுமன்ற உறுப்பினர்களான றிச்சட்த்திரன, டி.எம். ஜயரத்தின, நிமால் ஸ்ரீபால்டீ சில்வா, மற்றும் தினேஷ்குணவர்த்தனா ஆகியோர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;-

பாராளுமன்ற உறுப்பினரொருவரின் கார் ஒன்று, கம்பஹாபொலிஸ்நிலையத்துக்கு முன்பாக வைத்து சுடப்பட்டது. ஆனால் அச்சம்பவம் குறித்து அப்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய முடியவில்லை.

பலவீடுகள் எரிக்கப்பட்டும் வீட்டிலுள்ளவர்கள் தாக்கப்பட்டும் உள்ளனர். இது குறித்துக் கூட பொலிஸார் எதுவிதநடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந் நிலைமைகள் இலங்கையைமீண்டும்மனித உரிமை மீறல் யுகத்துக்கே இட்டுச் செல்கிறது.

புதிய அரசாங்கம் பதவிஏற்றதற்குப் பின்னர் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீர் குலைந்து போய்விட்டது. இதனால் சுற்றுலா உல்லாசப் பயணத்துறைப் பயணிகளின் வரவும் பெரிதும்பாதிப்படைந்துள்ளதென்று தெரிவித்துள்ளனர். (இ)

## உ.அ.அதிபர்அலுவலகத்தை மருதங்கேணிக்கு மாற்றுக

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையில் இப்போது இயங்கிவரும் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் மீண்டும் மருதங்கேணியில் இயங்க நடவடிக்கை எடுத்து உதவுமாறு வடமராட்சி கிழக்கு பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம் யாழ். அரசாங்க அதிபருக்கு எழுதிய கடிதத்தில் கோரியுள்ளது.

மருதங்கேணிப் பகுதியிலிருந்து முன்பு இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் அப்பகுதியில் குடியேறி வருகின்றனர் என்றும், இதுவரை பெரும்பாலானோர் குடியேறியுள்ளதால் தமது அவசியதேவையின் பொருட்டு 10 மைல்கள் தொலைவில் பருத்தித்துறையிலுள்ள மேற்படி அலுவலகத்திற்கு செல்ல வேண்டியுள்ள நிர்ப்பந்தத்தைச் சுட்டிக்காட்டி குறித்த அலுவலகத்தினை இடம்மாற்றவேண்டியதன் அவசியத்தினை அக்கடிதத்தில் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

மேலும்அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மருதங்கேணிப்பகுதியைச் சேர்ந்த கடற்கரைப் பகுதிகளில் சட்டத்திற்கு மாறான முறையில் அனுமதியின்றி மரங்கள் தறிக்கப்படுகின்றன. மணல் அள்ளப்படுகின்றன. இச்செயல்களால் கரையோரப் பகுதியில் வாழும்மக்களின் வீடுகளில் கடல்நீர் புகுந்து அவர்கள் இருப்பிடங்களை இழக்கவேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டில் குடத்தனைக்கு இடம் பெயர்ந்த மருதங்கேணி உதவிஅரசாங்க அதிபர் அலுவலகம் பின்பு 2000 ஆண்டில் பருத்தித்துறைக்கு மாற்றப்பட்டு அங்கேயே இயங்கிவருகின்றது. (எ)

## திருடர் கோஷ்டி பொதுமக்களால் விரட்டியடிப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்குப் பகுதியில் பொதுமக்களிடம் வகையாக மாட்டிக் கொண்ட திருடர் கோஷ்டி ஒன்று தமது புதிய சைக்கிளையும் கைவிட்டுத் தப்பி ஓடிய சம்பவம் நேற்று முன்தினம் இரவு கொக்குவில் பொற்பதி வீதிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி திருடர், மக்கள் உறங்கிய பின் திருடுவதற்காக வாழைத் தோட்டம் ஒன்றினுள் ஒளிந்திருந்த போது அப்பகுதி நபர் ஒருவர் கண்டு கூக்குரல் எழுப்பியதை அடுத்து, அப்பகுதி மக்கள் அனைவரும் திருட்டுக்குழுவை துரத்தியடித்துள்ளனர். (செ-19)

## புதிய பிர.செயலர் நியமனம்

(கொழும்பு)

திருகோணமலை பட்டினமும் சூழலும்' பகுதிக்கான பிரதேச செயலராக சுந்தரம் அருமைநாயகம்' நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமலை பிரதேச செயலராக பணியாற்றிய வி. வேலும் மயிலும் ஒய்வு பெற்றதை அடுத்தே இவருக்கு இந் நியமனம் வழங்கப்பட்டது.

இவர் திருமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

## இன்று காங்கேசன் செல்கிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வரா இன்று காங்கேசன் தடுப்பு முகாம் செல்லவுள்ளார்.

அவர், அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு அவர்களின் உறவினர்களால் வழங்கப்படும் கடிதங்கள் மற்றும் உடைகளை எடுத்துச் சென்று ஒப்படைப்பதுடன், கைதிகளினால் உறவினர்களிற்கு வழங்கப்படும் கடிதங்களையும் எடுத்து வருவார். (செ-9)

## உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க வேண்டாம் ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்கவேண்டாமென மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

மேற்குறிப்பிட்ட மாகாணங்களில் இத்தேர்தலை ஒத்திவைப்பதன்மூலம் அங்கு வாழும் தமிழ் மக்களின் ஜனநாய உரிமைகள் அற்றுப் போகக்கூடும் எனவும் மக்கள் விடுதலை முன்னணி அரசிற்கு சுட்டிக்காட்டியுள்ளது. (செ)

## இடைக்கால வ. செ. திட்டம் பெப். 5 இல் சமர்ப்பிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் இடைக் கால வரவு செலவுத்திட்டம் அடுத்த மாதம் 5 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மூன்று மாதத்திற்கான இடைக் கால வரவு செலவுத் திட்டம்5 ஆம் திகதிசமர்ப்பிக்கப்பட்டு 5, 6, 7, ஆம் திகதிகளில் அதன்விவாதம் பாராளுமன்றத்தில் நடை பெறவுள்ளது.

இதேவேளை முழுமையான வரவு செல்வுத் திட்டம் மார்ச் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. (வ)

## சிந்தனைக்கு விருந்து

### குட்டப் படுபவர் குட்ட முனைந்தால்?

குட்டக் குனிந்து கொடுத்தோர் தலைநிமிர்ந்து
குட்டுவோர்க் குட்ட முனைவரேல் - குட்டுவோர்
தாங்குனிவார் முன்குனிந் தோர்நிமிர்ந்து நிற்பார்கள்
ஈங்குயர்வு தாழ்வொழியு மாம்:

'பழையவன்'

## விளையாட்டு செய்திகள்

## ஒரு நாள்போட்டியில் நியூஸிலாந்து அணிவெற்றி

(அடிலொய்ட்)

அடிலொய்டில் நடைபெற்று வரும் 3 நாடுகளுக் கிடையேயான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்து அணி 77 ஓட்டங்களால் அவுஸ்திரேலிய அணியைத் தோற்கடித்துள்ளது.

கடந்த சனிக்கிழமைஇடம் பெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 5 விக்கெட்களை இழந்து 242 ஓட்டங்களைப்பெற்றது. இதில்நாதன் ஆஸ்லே 95 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியஅணி 165 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்களையும் இழந்தது. இதில் பெவன்மட்டும் அதிக ஓட்டமாக 45 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

(செ-10)

## கால் இறுதிப் போட்டிக்கு நைஜீரிய அணி தெரிவு

(நைஜீரியா)

ஆபிரிக்க நாடுகளிடையே நடைபெற்று வரும் 'வெற்றிக்கிண்ண' உதைபந்தாட்டப் போட்டியில் கால் இறுதிப் போட்டிக்கு நைஜீரிய அணி தெரிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற போட்டியில் நைஜீரிய அணி 1-0 என்ற கோல்கணக்கில் லைபீரிய அணியைத் தோற்கடித்து கால் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது. (செ-10)

## அவுஸ்திரேலிய ஒப்பன் டெனிஸ் சம்பியனாக அமெ. ஜெனிப்பர் தெரிவு

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலிய ஒப்பன் டென்னிஸ் சம்பியனாக அமெரிக்க ஜெனிப்பர்காப்பிரியாட்டி தெரிவா யுள்ளார். இவருக்கு 2.50 கோடி (இந்திய ரூபா)பரிசாகக் கிடைத்துளளது.

மெல்போர்னில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதல்நிலைவீராங்கனையான காப்பிரியாட்டி 4–6, 7-6, 6-2 என்ற செட் கணக்கில் ஸ்விட்சர்லாந்தின் மார்ட்டினா ஹிங்கிஸைத் தோற்கடித்தார்.

மயிர்க் கூச்செறியும் இந்த ஆட்டத்தில் காப்ரியாட்டி முதல் செட்டை இழந்தவுடன் அடுத்த செட்டில் 0-4 என பின்னடைவு பெற்றிருந்தும் பட்டத்தை வென்று வரலாற்றில் இடம் பிடித்து விட்டார். (செ-10)

## காஷ்மீர் தொடர்பான பேச்சுக்கு இந்தியா பாகிஸ்தானுக்கு அழைப்பு

(புதுடில்லி)

பாகிஸ்தானுடன் பேச்சு நடத்தப் போவதாக இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் காஷ்மீரின் மூன்றில் ஒரு பகுதியை வலுக்கட்டாயமாகக் கைப்பற்றிக் கொண்டது தொடர்பாகவே பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை இடம்பெறும் என்றும் அதற்கு தாம் தயார் என்றும் வாஜ்பாய் தெரிவித்தார்.

இதேவேளை புதிதாகப் பேச்சுவார்த்தை நடத்த முஷாரப் முன்வந்திருப்பது குறித்து பேசுகையில்; லாகூர் மற்றும் ஆக்ரா பேச்சுக்கள் தோல்வி அடைந்துவிட்டதால் புதிய பேச்சுக்களினால்என்ன பயன் ஏற்படப் போகிறது என்று தெரிவித்தார்.

காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்த பகுதியென்றும் அது முழுமையாக இந்தியாவுடன் இணைவதை உலக நாடுகள் வரவேற்குமென்றும் வாஜ்பாய் தெரிவித்தார்.

ராஜ்பூரில் நடந்த கூட்டத்தில் அடல்பிஹாரி வாஜ்பாய் மேலும் தெரிவிக்கையில் ஜம்முமக்கள் இந்தியாவுடன் இணைவதை விரும்புகிறார்கள் என்றும் விரைவில் அங்கு பொதுத் தேர்தல் நடைபெறுமென்றும் தெரிவித்தார். (து)

# உலக தரிசனம்

## அமெரிக்க- நியூயோர்க் தாக்குதலுக்கு முதல் நாள் பின்லேடன் பாகிஸ்தானில் சிகிச்சை பெற்றார்

(இஸ்லாபாத்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரம் மீது விமானத்தாக்குதல் இடம்பெறுவதற்கு முதல் நாள் ஒஸாமா பின்லேடன் பாகிஸ்தான் வைத்தியசாலை ஒன்றில் சிறுநீரக சிகிச்சை பெற்றதாக பாகிஸ்தான் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ராவல் பிண்டியிலுள்ள இராணுவ வைத்தியசாலை ஒன்றில் பின்லேடனுக்கு இரகசியமாக சிறுநீரகசிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் அப்போது வைத்தியசாலையில்கடமையிலிருந்த சிறுநீரக சிகிச்சைப்பிரிவு ஊழியார்கள் மாற்றப்பட்டு வேறு ஊழியர்கள் பணியில் அமர்த்தப்பட்டதாகவும் வைத்தியசாலையின் தாதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த தினத்தில் சிகிச்சைக்காக நபர் ஒருவர் காரில் வந்து இறங்கிய போது அவர் ஒஸாமா பின்லேடன் என இராணுவ அதிகாரிகள் பேசிக் கொண்டதை தான் கேட்டதாகவும் அந்தத் தாதி தெரிவித்துள்ளார். (செ-5)

## அமெரிக்கா மீண்டும் இந்தியாவிற்கு ஆயுதம் விற்பதாக அறிவிப்பு

(புதுலிலலி)

அமெரிக்கா மீண்டும் ஆயுதங்களை இந்தியாவிற்கு விற்கப்போவதாக அறிவித்துள்ளது.

நேற்று புதுடில்லியில் அமெரிக்க தூதர் றொபேட்பிளாக்மில் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸைச் சந்தித்துப் பேசுகையில் இதனைத்தெரிவித்தார்.

(3ம் பக்கம் பார்க்க)

## கொல்கத்தா அமெரிக்க நிலையம் தாக்குதல் சூத்திரதாரி மாலிக் மீண்டும் இந்தியாவிற்கு மிரட்டல்

(புதுடில்லி)

கொல்கத்தா அமெரிக்க நிலையம் தாக்குதலுக்குப்பின் மீண்டும் ஹாரன்மாலிக்என்பவர் இந்தியாவிற்கு மிரட்டல் விடுத்துள்ளார்.

மேலுள்ளசம்பவத்தின் சூத்திரதாரியான ஹாரன்மாலிக் பாகிஸ்தானிலுள்ள தீவிரவாத இயக்கத்துடன் தொடர்புடையவரென்றும் இவர் இப்பொழுது இந்தியச் சிறைகளிலுள்ள தனதுஇயக்கஅங்கத்தவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்றும், அப்படி விடுதலை செய்யாத விடத்து தற் கொலைக் குண்டுதாரிகள் மூலமாக விடுவிக்கப்போவதாகவும் தொலைபேசி மூலம் மிரட்டல் விடுத்திருப்பதாக இந்திய உள்துறைச் செயலர் கமல்பாண்டே தெரிவித்துள்ளார். (து)

## ஆப்கானிஸ்தானில் அமெரிக்க தாக்குதல்கள் குறித்து ஹமீட் ஹர்ஸாய் பேசுவார்

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் இடைக்கால அரசுத் தலைவரான ஹமீட் ஹர்ஸாய் அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இவ் விஜயத்தின்போது, ஆப்கானிஸ்தானில் நடைபெற்றுவரும் அமெரிக்காவின் தாக்குதல் நடவடிக்கைகளின் எதிர்காலம் குறித்து, முக்கியமாக இப் பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதிகளில் அமெரிக்க விமானங்கள் இடையிடையே தற்போதும் குண்டுத்தாக்குதல்களை நடத்திவருகின்றது.

இதனால் இந்நடவடிக்கைகளுக்கு பழங்குடியின அதிகாரிகள் கடும்எதிர்ப்புத் தெரிவித்து வருவதால் இது தொடர்பாகவும் அமெரிக்க அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தையில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (செ-5)

## தென்கொரியாவின் விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் பலி

(சியோல்)

தென் கொரியாவில் பிரபல்யம் வாய்ந்த விடுதி யொன்றில் நேற்று காலை திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் பத்துப் பேர் உயிரிழந்ததுடன், ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

இரு மாடிகளைக் கொண்ட இவ் விடுதிக் கட்டடத்தில் ஏற்பட்ட இத்தீ விபத்தில் படிக்கட்டுக்கள் வழியே உருண்டு வந்த 10 பேரே இறந்துள்ளனர் இவர்கள் அனைவரும் பெண்கள் ஆவர்.

இத் தீ விபத்துக்கான காரணம் எதுவும் கண்டறியப்படாத நிலையில் மின்சாரக் கோளாறே இவ் விபத்திற்கு காரணமாக இருக்கலாம் என அந் நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (செ-5)

## கொலம்பியாவில் 2-வது பயணிகள் விமானமும் காணாமற் போயுள்ளது

(பொஹோரா)

கொலம்பியாவின் தென்பகுதியில்94 பயணிகளுடன் விமானம் ஒன்று காணாமல் போயுள்ளது.

ஈக்குவடோர் நாட்டைச் சேர்ந்த போயிங் விமானம் கொலம்பியாவின் மலைச் சாரல்களில் மோதியிருக்கலாம் என ஈக்குவடோர் சிவில் விமான போக்குவரத்துத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இவ்விமானம் புறப்பட்டு 10 மணித்தியாலங்கள் வரை எதுவித செய்தித் தொடர்பும் கிடைக்காத நிலையில் அந் நாட்டு அதிகாரிகள் தேடுதல் நடவடிக்கைகள் அனைத்தையும் பூர்த்தி செய்துள்ளனர்.

கொலம்பியாவில் 14 நாட்களுக்குள் காணாமல் போன இரண்டாவது விமானம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-8)

## உஸ்பெஸ்கிஸ்தான் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு மேற்குலக நாடுகள் கடும் எதிர்ப்பு

(டஸ்கென்ட்)

உஸ்பெஸ்கிஸ்தான் நாட்டு ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 5 வருடங்களில் இருந்து 7 வருடங்களாக நீடிப்பதற்கு மேற்குலக நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிப்பது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு மேற்கொண்டகருத்துக்கணிப்பில், உஸ்பெஸ்கிஸ்தானில் 92 வீதமான மக்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

இதேவேளை, ஒருசபையாக இயங்கும் பாராளுமன்றத்தை இரண்டு சபைகளாக மாற்றுவதற்கும் அம் மக்கள் ஆதரவளித்துள்ளதாகவும் அந் நாட்டின் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தை இரண்டு சபைகளாக மாற்றுவது தொடர்பாக சர்வதேச தராதரங்களுக்கமைய வாக்களிப்பு நடைபெறவில்லையென மேற்குலக நாடுகள் குற்றம் சாட்டியுள்ளனர் ஜனாதிபதியின் பதவிக்காலம் நீடிப்பானது ஆட்சியில் தொடர்ந்து நீடிப்பதற்கான ஒரு சதித் திட்டமென்றும் அந் நாடுகள் மேலும் கருத்து தெரிவித்துள்ளன. (செ-5)

## 20 பேரைக் கையளிக்க பாகிஸ்தான் ஆலோசனை

(இல்லாமபாத்)

இந்தியா கோரியுள்ள 20 குற்றவியலாளர்களையும் விடுவிப்பது தொடர்பாக பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப் ஆராயவுள்ளார்.

பாகிஸ்தான் உயர் இராணுவ அதிகாரிகளின் கூட்டத்தில் இன்று அதிபர் ஜெனரல் இது பற்றி பேசவுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் இந்தியாவின் கோரிக்கை பாகிஸ்தானின் பாதுகாப்பு மற்றும் படையினரின் நிலை தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. (து)

பகை என்னும் பண்பிலதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற்று அன்று
- குறள்

# வலம்புரி

## இனவாதம் வேண்டாம்

விடுதலைப் புலிகள் தம் மீதான தடையை நீக்குமாறு கோரிக்கை எதனையும் முன்வைக்கவில்லை. அவர்கள் மீதான தடையை நீக்கவேண்டுமென என்ன காரணத்திற்காகப் பலரும் பாடுபடுகிறார்களோ தெரியவில்லை இப்படிக் கூறியிருக்கிறார் பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன.

அமைச்சர் மாரப்பனவின் இக் கூற்று அவருக்குள் மறைந்திருக்கும் இனத்துவேஷத்தை வெளிக்காட்டுவதாக உள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் நடந்த சமாதானப்பேச்சு முறிவடைவதற்கு முக்கிய காரணமாக இருந்ததே புலிகள் மீதான தடை என்பதை அமைச்சர் மாரப்பன அறியாதிருக்க முடியாது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் காலத்தில் பிரதமராக இருந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்கா மீண்டும் ஆட்சியில் அமர்வதற்காக இனவாதம் பேசி, இருந்த பதவியையும் இழந்து போனது நாடறிந்த செய்தி. இதனைக் கவிஞர் வைரமுத்துவின் மொழிகளில் கூறினால் 'பட்டு வேட்டிக்குஆசைப் பட்டு கட்டியிருந்த கோவணத்தையும் இழந்தார்' எனக் கூறலாம். இது முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவுக்கு பெரிதும் பொருந்தும்.

இத்தகைய ஒரு நிலை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்படக்கூடிய வாய்ப்பு அமைச்சர் மாரப்பன போன்றவர்களின் பொறுப்பற்ற வார்த்தைப் பிரயோகங்களினால் ஏற்படலாம்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டுமென முனைப்பாக நிற்பதன் காரணம் என்ன என்பதை தன்னால் புரிந்து கொள்ள முடியவில்லையெனக் கூறும் அமைச்சர் மாரப்பன, தமிழ் மக்களின் உணர்வலைகளை - தமிழ் மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உறவு நிலையைப் புரிந்து கொள்ளவில்லை என்பது அவரது கேள்வியிலிருந்து புலனாகும்.

தொடர்ந்தும் சிங்கள அரசுகள் இனவாதம்பேசுவதை தவிர்த்து சமாதானம் ஏற்படப்பாடு படுவதே ஒற்றை ஆட்சிக்கு ஆரோக்கியமாகும்.

# நெடுந்தீவின் வரலாற்று சின்னமான குதிரைகள்
# அழிந்து போகாது தடுக்க நடவடிக்கை தேவை

முன்னர் அதாவது 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளில் நெடுந்தீவு புல்வெளிகளும் நன்நீர்த்தேக்கங்களும் நிறைந்த பகுதியாகக் காணப்பட்டதால் குதிரை வளர்ப்புக்கு உகந்த பிரதேசம் என்பதைக் கண்டு கொண்ட ஒல்லாந்தர்களும் ஆங்கிலேயர்களும் குதிரைவளர்ப்பில் அக்கறைகாட்டினார்கள். அரேபியா, யாவா போன்ற நாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட உயர்ரகக் குதிரைகள் அவர்களால் வளர்க்கப்பட்டன.

### குதிரைக்குட்டிகள்

குதிரைகள் வளர்ப்பதில் கூடிய அக்கறையை ஒல்லாந்தர்கள், ஆங்கிலேயர்கள் கொண்டிருந்தாலும் போர்த்துக்கேயர் காலத்திலேயே அவை நெடுந்தீவுக்கு முதல் தடவையாகக் கொண்டுவரப்பட்டதெனக் கூறப்படுகிறது. 1697 ல் ஒன்று முதல் இரண்டு வயது வரையான ஐந்நூறு குதிரைக் குட்டிகள் இங்கு வளர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இலங்கையில் தமது ஆதிக்கத்தைச் செலுத்திய இவர்கள் உள்ளூர் போக்குவரத்திற்கெனவும் உணவுத் தேவைக்காகவும் அவற்றைப் பயன்படுத்தினார்கள். குதிரைகள் அரசுடமையாகவே இருந்து வந்தன, அவற்றைப் பராமரிப்பதற்கென அரசு அதிகாரிகளை நியமித்தது.

கி.பி.1798 ல் குதிரைகளின் பொறுப்பு; வருமான ஏஜண்டாக இருந்த பார்புற் என்பவரிடம் இருந்தது. 1815 ல் சன்சோனி குதிரை வளர்ப்பு மேற்பார்வைக்கு நியமிக்கப்பட்டான். இதற்குச் சம்பளமாக 390 இறசால் வழங்கப்பட்டது இரண்டு ஆண்டுகளின் பின் எட்வேட் நோளனும் அவனுக்குப் பின் 1826 ல் அதேட்டன் என்பவனும் இப்பதவிகளில் பணியாற்றினார்கள்.

### 1833 ல் கச்சேரி நீக்கம்

நெடுந்தீவுக் கச்சேரி 1833 ல் நீக்கப்பட்டு உத்தியோகத்தர்களும் விலக்கப்பட்டதை அடுத்து அரசின் குதிரை வளர்ப்புத் தொழிலும் கைவிடப்பட்டது. இதன் பின் தரவைகளில் சுதந்திரமாகவும் தம் இஷ்டப்படியும் திரிந்த இந்தக் குதிரைகளை சிலர் பிடித்து தமது அடையாளங்களைச் சுட்டு அவற்றைத் தமதாக்கிக் கொண்டனர். இவர்களின் வாரிசுகளும் குதிரைகள் தமது பாட்டன் கொப்பாட்டனின் சொத்து எனக் கொண்டு தமது அடையாளங்களைப் பதித்துக் கொண்டனர். இவ்வாறு தான் குதிரைகள் தனிப்பட்டவர்களின் உடைமைகளாக மாற்றப்பட்டன. ஆனால் உண்மையில் இவை அந்நியரின் நிர்வாகம் கைவிடப்பட்ட பின்னர் வந்த அரசின் அல்லது உள்ளூராட்சி மன்றத்தின் உடைமையே.

### குதிரைகள் விபரம்

1896 ல் பேற் என்பவர் ஒரு அதிகாரியான ஐவேஸ் என்பவரிடம் குதிரைகளை வளர்க்கும் உரிமையைத் தமக்குத் தருமாறு விண்ணப்பித்த போதும் அவற்றை

**கடலூரான்**

நல்லரகக் குதிரைகளாக்கும் செயற்பாட்டை அரசே மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். முதலியார் செ. இராசநாயகம் எழுதிய நூலில் நெடுந்தீவுக் குதிரைகள் பற்றிய விபரங்கள் உண்டு.

வெளியிடங்களில் இருந்து வருபவர்களைக் கதிகலங்க வைக்கும் கடல் நெடுந்தீவுக் கடல், அந்தக் கடலையும் தாண்டி,

''மேவிய புல் வெளி தன்னை அடைந்தங்கே மேயும் குதிரைகள் பல கண்டேன்'' என நெடுந்தீவுக் குதிரைகளைப் பார்த்து ரசிக்கவென வெளியிடங்களில் இருந்து வரும்உல்லாசப் பயணிகள் ஏராளம் யுத்தத்திற்கு முன்னர் வெல்லை வெளியில் உல்லாசமாகத் திரியும் குதிரைகளைப் பார்த்து ரசிப்பதன் மூலம் தமது பயணம் ஒரு நிறைவான பயணம் எனக்கொள்வது வெளிநாட்டவர்களிடையே சகஜம்.

### வரலாற்றுடன் இணைந்தவை

நெடுந்தீவின் வரலாற்றுடன் இணைந்த அரசுடைமையான இவற்றை ஏற்றுமதி செய்வதும் பராமரிப்பின்றி அலைய விடுவதும் தவறு. நெடுந்தீவின் இருப்பைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் முக்கிய வரலாற்றுச் சின்னம் இடையிட்டுவந்த உரிமையாளர்கள், தரகர்களால் வெளியிடங்களுக்கு விற்பனை செய்வதும் எடுத்துச் செல்வதும் தவிர்க்கப்படவேண்டும். தடுக்கப்படவேண்டும்.

சுமார் 30 வருடங்களுக்கு முன் தென்னிலங்கையில் இருந்தும் யாழ். குடாநாட்டில் இருந்தும் வந்த சிலர் குதிரைகளின் உரிமையாளர்கள் எனத் தம்மில் முத்திரை குத்திக் கொண்டுள்ளவர்களிடமிருந்து இவைகளை விலைக்கு வாங்கிச் சென்ற சம்பவங்கள் தொடரக்கூடாது என்பதிலும் நெடுந்தீவின் இருப்பு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலும் அக்கறை கொண்ட நெடுந்தீவு முன்னேற்றக்கழகம் அப்போதைய காரியாதிகாரி கிராமசபைகளுடன் தொடர்பு கொண்டு குதிரைகள் அரசுடைமையெனவும் அவற்றை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வது தடை செய்யப்படுவதுடன் அவற்றின்மீது உரிமை கொண்டாடவோ பாத்தியதைகொள்ளவோ எவரும் அனுமதிக்கப்படக் கூடாதெனவும் அறிவிக்குமாறு கோரிக்கை விடுத்தது.

### ஏற்றுமதி தடை

இந்தக் கோரிக்கையை அடுத்து 1972ல் குதிரைகள் ஏற்றுமதி செய்வது தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அவை அரசுடைமைகள் எனவும் காரியாதிகாரி பகிரங்கப்படுத்தியிருந்தார். அனேகர் இதுபற்றி இன்றுவரை அறியாதுள்ளனர் என்பது ஆச்சரியமானது.

காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள் நிர்வாக செயற்பாடுகளின் சீர்குலைவுகள் குதிரை விவகாரத்திலும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. குதிரைகளை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லும் நிலைமைகள் கேட்பாரின்றித் தொடர்கிறது. குதிரைகளை ஏற்றும் நடவடிக்கையானது நெடுந்தீவின் வரலாற்றை அழிக்கும் முயற்சியாகவே கொள்ளப்பட வேண்டும்.

சிலகாலத்திற்கு முன்னர் ஆறாயிரத்துக்கும் அதிகமான குதிரைகள் சுதந்திரமாக நடமாடிய வெல்லை, சாராப்பிட்டி, ராணிகோபுரம் பகுதிகளில் இன்று குதிரைகளைக் காண்பது மிகவும் அரிதாகவே உள்ளது.

### சரித்திரச் சான்றுகள் சிதைவு

பலவந்தமாக அவற்றைப் பிடித்து வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வதாலும் போதிய பராமரிப்பின்றியும் வரட்சி காரணமாகவும் அவற்றின் தொகை அருகிவிட இன்று நெடுந்தீவில் ஒரு ஐந்நூறு குதிரைகளாவது உண்டா என்பது சந்தேகத்திற்குரியதே.

குதிரைகள் மட்டுமன்றி ஏனைய சரித்திரச் சான்றுகளும் சிதைந்தவண்ணமே உள்ளன. இவை பேணப்படாவிட்டால் எதிர்காலம் நெடுந்தீவை மறந்துவிடும். நாமே நமது வரலாற்றுப் பெருமைகளைச் சிதைக்கலாமா?

'இவ்விலங்கினத்தைப் பிடித்துச் சென்றால் விரைவில் அது அழிந்துவிடுமல்லவா? பொதுமக்கள் விழிப்புடன் இருந்தால்தான் இவற்றை ஓரளவுக்காவது தடுக்க முடியும்'. நெடுந்தீவின் வரலாற்றுச் சின்னங்கள் என்ற தலைப்பில் 31.3.1974 ஆம் திகதி தினகரன் பத்திரிகையில் ஆசிரியர் கருத்தாக வெளியான தகவல் குறித்து ஒவ்வொரு நெடுந்தீவுப் பிரஜையும் சிந்திக்க வேண்டும்.

## தினசரி தியானம்
## தேடுதலும் தள்ளுதலும்

வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

- திருக்குறள்

உனக்கென்று வாழக் கற்றுக் கொண்டால் பிறகு தேவாதிதேவா, நான் தேடவேண்டியதோ, தள்ள வேண்டியதோ ஒன்றுமில்லை.

இனியது என்று ஒன்றைப் பெற முயலுதலும், இன்னாதது என்று ஒன்றை அகற்ற முயலுதலும் உலக மக்களது இயல்பு. பண்பாடு அடைய முயலுபவர் போக்கு அத்தகையதன்று இனியது, இன்னாதது வாயிலாக இயற்கைத்தாய் உயிர்களைத் திருத்தியமைக்கிறாள். தானாக வந்தெய்தும் இனியதனிடத்து நல்லார் நாட்டம் வைப்பதில்லை. தானாக வந்தெய்தும் தீதினிடத்தும் அவர்கள் வெறுப்புக் கொள்வதில்லை. ஆத்ம பரிபாகத்துக்கு அவ்விரண்டையும் அவர்கள் பயன் படுத்திக் கொள்கின்றனர்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

கண்ணிவெடி பாவனையை நிறுத்தக்கோரி

## பௌத்த பீடாதிபதிகளிடம் நாளைகைஎழுத்து வேட்டை

(கொழும்பு)

இலங்கையில் கண்ணிவெடி பாவனையைக் கைவிடக் கோரும் முகமாக கண்ணிவெடி விழிப்பு இயக்கம் அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடாதிபதிகளிடம் நாளை வியாழக்கிழமை கையெழுத்துக்களை திரட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கையில் இடம் பெற்று வரும் யுத்தம் காரணமாக அரசும் புலிகளும் கண்ணிவெடிகளைப் பயன்படுத்திவருகின்றனர். இதனால் பொது மக்களே பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே அரசும் புலிகளும் கண்ணிவெடி பாவனையை நிறுத்துமாறு கோரும் மகஜரில் பௌத்த பீடாதிபதிகளிடம் நாளை ஒப்பம் பெறும் நடவடிக்கையில் தாம் ஈடுபட்டுள்ளதாக கண்ணிவெடி விழிப்பு இயக்கத்தினர் தெரிதுள்ளனர். (செ-5)

## யாழ். உதைபந்து லீக்கினால் உதைபந்து வீரர் மூவருக்கு தண்டனை விதிக்கப்பட்டது

யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் உதைபந்தாட்ட அணி வீரர் ஒருவர் நடுவருடன் கைகலப்பில் ஈடுபட்டதால் அவருட்பட அந்த அணியைச் சேர்ந்த மூவருக்கு யாழ். உதைபந்தாட்ட லீக் தண்டனை வழங்கியது.

யாழ். பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்டு வரும் 2002 ற்கான விளையாட்டுப் போட்டித் தொடரின் ஓர் அங்கமான உதைபந்தாட்ட போட்டிகடந்த26ஆம் திகதி மேற்படிஅரங்கில்நடைபெற்ற இப் போட்டியில் பாஷையூர் சென் அன்ரனீஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென் மேரீஸ் அணி ஆடியது.

இதன் போது நடுவரின் தீர்ப்பை எதிர்த்து நாவாந்துறை சென்மேரீஸ் அணி வீரர் சச்சரவைக் கிளப்பியதனாலேயே அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது. (செ-110)

### தேர்தல் சட்டமூலம்..

அரசு அடுத்தமாதம் 5ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இது இவ்வாறிருக்க வடக்கு கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைப்பு தொடர்பாக ஸ்ரீ.மு.காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பிரதமர் ரணிலுடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து வடக்கு கிழக்கில் தேர்தலை ஒத்திவைப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருமலை, வவுனியா மாவட்டங்களில் தேர்தல்களை நடத்துவதற்குரிய பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருவதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (வ)

### வழக்கு..

மடைந்த 17 பேர்களின் சார்பிலோ சட்டத்தரணிகள் ஆஜராகவில்லை.

நீதிமன்றில் ஆஜராகி இருந்த 17 பேரும் தத்தம் வாக்கு மூலங்களை நேற்று நீதிமன்றில் வழங்கியிருந்தனர். இதனையடுத்து வழக்கு விசாரணை நாளை வியாழக்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (வ10)

### ஏப்ரல்..

அதிகரித்த மின்கட்டணத்தை மார்ச் மாதம் அமுல்படுத்த வேண்டும் என்று நிதியமைச்சர் தெரிவித்துள்ள போதும் மார்ச் மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இடம் பெறவுள்ளதால் ஏப்ரல் மாதம் வரை மின்கட்டண அதிகரிப்பு பிற்போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

## இராணுவத்தின் வாகனம் மோதி இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ வாகனம் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்திய சாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் இடம் பெற்றது.

சம்பவத்தில் நாவற்குழியைச் சேர்ந்த எம்மலிக்கஸ் செபஸ்ரியன் (வயது 20) என்ற இளைஞரே காயமடைந்தவராவார்.

இவர் இடம்பெயர்ந்து கந்த ரோடையில் வசிப்பவர் என்றும் சம்பவதினம் யாழ்ப்பாணம் செல்ல வீட்டிலிருந்து புறப்பட்டு வந்தவரென்றும் கூறப்படுகின்றது. (செ-10)

## பிரான்சிஸ் அடிகளார் காலமானார்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் அருட்திரு யோண் பிரான்சிஸ் அடிகளார் நேற்று இறைபதம் அடைந்துவிட்டார்.

இலண்டன் பட்டதாரியான இவர் 1947ம் ஆண்டு இறைபணிக்காக திருநிலைப்படுத்தப்பட்டவர்.

இன்று இவரது பூதவுடல் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினால் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். (இ)

## யாழ். மின்சார சபை பொறியியலாளர் மரணம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் யாழ். கிளைப் பொறியியலாளர் நேற்று மாரடைப்பால் காலமானார்.

அலுவலகத்தில் கடமையில் இருந்த சமயம், நெஞ்சுவலி ஏற்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் மரணமானார்.

யாழ். நாயன்மார்கட்டைச் சேர்ந்த எஸ். செந்தில்நாதன் என்பவரே மரணமானவராவார். (செ-10)

### ஜனாதிபதியின்..

இதேவேளை ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்கள் தேர்தல் காலத்தில் தாக்கப்பட்டமை மற்றும் கொல்லப்பட்டமை தொடர்பான அடையாள அணிவகுப்பு நேற்று கண்டி நீதிமன்றத்தில் நடைபெற்றது. இந்த அணிவகுப்பின் போது ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவைச்சேர்ந்த 5பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ந.4)

## ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கூடாதெனக் கோரி ஜே.வி.பி. நேற்று கொழும்பில் பல இடங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்களுக்கு ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ தலைமை தாங்கினார். (வ)

## சுவர் வீழ்ந்து இளைஞன் மரணம்

(யாழ்ப்பாணம்)

சுவர் இடிந்து விழுந்ததில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இத்துயரச் சம்பவம் யாழ்ப்பாணம் ஓட்டுமடம் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இராமு ஜெகதீஸ்வரன் (வயது17) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார். இவரது சடலம் யாழ் போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டு மரணவிசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது அதேவேளை பிரஸ்தாப நபர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் மிதி வெடிச் சம்பவம் ஒன்றில் அகப்புட்டு கால் பாதத்தை இழந்தவர் என்புது இங்கு குறிப்பிடத்தக்கது. (செ.10)

## அறிவித்தல்

**யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்**
**சாவகச்சேரி.**

மட்டுவில் பிரதேசத்தில் குடியேறித் தமது பிள்ளைகளை யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வியில் கற்பிக்க விரும்பும் பெற்றோர் எதிர்வரும் 05.02.2002க்கு முன்னர் யா/ கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் இயங்கும் மேற்படி பாடசாலையிலோ, அல்லது உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இயங்கும் நாவற்குழி ம.வியிலோ தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மு. பாலசுப்பிரமணியம்
அதிபர்.

(4419)

**வட இலங்கைச் சங்கீத சபையினர் நடாத்தும்**
**சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்**
**155வது ஆராதனை விழா 2002**

**இடம்:** நல்லை ஆதீன மண்டபம், நல்லூர்.
**காலம்:** 2002.02.03 (ஞாயிற்றுக்கிழமை)
**நேரம்:** காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 3.30 வரை.

*மேற்படி சபை அங்கத்தவர்கள், சங்கீத அபிமானிகள் வருகை தந்து சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.*

திருமதி செ. மகாலிங்கம்
தலைவர்.

திரு. அ. தற்பரானந்தன்
செயலாளர்.

(C/3415)

**2004 A/L**
**கலை, வர்த்தகம்**
இவற்றிற்குரிய வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(C/3415)

## மரண அறிவித்தல்

**செல்லப்பா செந்தில்நாதன்**
(மின்பொறியியலாளர், தலைமை அலுவலகம், யாழ்ப்பாணம்)

பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், யாழ். நாயன்மார் கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா செந்தில்நாதன் 29.01.2002 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் கலாநிதியின் அன்புக் கணவரும், பொன்னாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற விஸ்வநாதன் செல்லப்பா (ஆசிரியர்) அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்திய கலாநிதி க. குகநாகதாசன் மற்றும் தில்லைநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும், மயூரதாசன் (யாழ். பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா மாணவன்) அவர்களின் அன்புத் தந்தையும், தயாநிதி (லண்டன்), சாந்திநிதி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), ஜெயநிதி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற க.இராசேந்திரம் (ஓய்வு பெற்ற உடற்பயிற்சி ஆசிரியர்), மற்றும் வித்துவான் மகேஸ்வரி (செங்குந்த இந்துக் கல்லூரி) ஆகியோரின் ஒன்றுவிட்ட மருமகனும், பதுமநிதி (லண்டன்), செந்தில்நிதி (விரிவுரையாளர், தென்கிழக்கு பல்கலைக்கழகம்) ஆகியோரின் மைத்துனரும் லீலா (லண்டன்), பாலசுப்பிரமணியம் (லண்டன்), வைத்திய கலாநிதி தனவந்தி (கொழும்பு தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும், காலஞ்சென்ற இரகுராமன், கைலைநாதன், சபாநாதன் (ஆசிரியர்), பஞ்சநாதன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 30.01.2002 புதன்கிழமை (இன்று) இல.59, இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நண்பகல் 1.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், சக உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இல.59, இராமநாதன் வீதி,* செ. கலாநிதி



உ
சாமியே சரணம் ஐயப்பா

## அழைப்பிதழ்

*"சர்வதேச இந்துமத குருபீடாதிபதி"*
*"சபரிமலைக்குருமணி"*
**கலாநிதி ஸ்ரீஐயப்பதாஸ**
**சாம்பசிவ சிவாச்சாரியார்**
**(அகில இலங்கை சமாதான நீதிவான்)**
அவர்களின்
**44 ஆவது பிறந்தநாள் விழா**

## 44 ஆவது பிறந்தநாள் விழா

இடம்: ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்
(தம்பையா சத்திரம் - கொச்சிக்கடை)

காலம்: 30.01.2002 புதன்கிழமை

நேரம்: மாலை 5.30 மணி முதல் 8.30 மணி வரை

**அருளாசியுரை:** பிரம்மஸ்ரீ பா. ஷண்முகரெட்ண சர்மா J.P.
*(ஸ்ரீபால செல்வ விநாயகர் ஆலய பிரதம குரு - மருதானை)*

சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள்
*(பிரதம குரு - ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம்)*

**விழாத் தலைவர்:** பிரதிஷ்டா சிரோமணி நவாலியூர் பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்
*(வித்வத் சபைத் தலைவர் - சர்வதேச இந்துமத குருபீடம்)*

**பிரதம அதிதிகள்:** கௌரவ கே. கணேசலிங்கம் J.P.U.M.
*(கொழும்பு மாநகர முன்னாள் முதல்வர்)*

கௌரவ கலாநிதி ஜே. திவ்வியநாதன் Ex.M.P.
*(கௌரவ போஷகர், ஸ்ரீ சாஸ்தாபீட முத்தமிழ்ச் சங்கம்)*

கௌரவ மனோ கணேசன்
*(பாராளுமன்ற உறுப்பினர், கொழும்பு மாவட்டம்)*

**சிறப்பு அதிதிகள்:** தேசபந்து வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை J.P.
*(தர்மகர்த்தா - ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்)*

திருவாளர் டி.எம். சுவாமிநாதன்
*(தர்மகர்த்தா - ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்)*

திருவாளர் பொன். வல்லிபுரம் J.P.
*(தர்மகர்த்தா - மயூரபதி அம்பாள் தேவஸ்தானம்)*

கம்பவாரிதி இ. ஜெயராஜ்
*(அமைப்பாளர் - கம்பன் கழகம்)*

**விழா ஏற்பாடு: சபரிமலை - ஸ்ரீசாஸ்தாபீட பக்தர்கள், தொண்டர்கள்**

**N.S. மோகன் நாயுடு J.P.**
*(நிர்வாகப் பணிப்பாளர்)*

**வே. செல்வநாயகம்**
*(நிர்வாகச் செயலாளர்)*

(C/3417)

---

உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.59, இராமநாதன் வீதி,*
*நாயன்மார்கட்டு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
**செ. கலாநிதி**
(மனைவி)

(C/3416)

---

## அருள்திரு. யோண் பிரான்சிஸ், அ.ம.தி. அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள்.

அருள்திரு. யோன் பிரான்சிஸ், அ.ம.தி. நேற்றைய தினம் 29.01.2002 செவ்வாய்க்கிழமை கொழும்புத்துறை அமலஉற்பவ இல்லத்தில் இறைபதம் அடைந்தார். அடிகளார் அமரர்களான மரியாம்பிள்ளை பிரான்சிஸ், மேரி எலிசபேத் ஆகியோரின் அன்பு மகனாவார்.

அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருள்தந்தை அவர்கள் 1947 ஆம் ஆண்டு அருள் பணியாளனாக திருநிலை படுத்தப்பெற்று அனுராதபுரம், ஊர்காவற்துறை, நாவாந்துறை, நல்லூர், மிருசுவில், பாசையூர், ஏழாலை ஆகிய பங்குகளில் பணியாற்றியுள்ளார்.

புனித பத்திரிசியார் கல்லூரியிலும், இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியிலும் அதிபராகக் கடமையாற்றி, யாழ். மறைமாவட்ட கல்வி நிர்வாகத்துறையில் பணிபுரிந்துள்ளார்.

அமரரான அடிகளாருக்கு அளிக்கும் அஞ்சலி நிகழ்வு களும், இறுதி யாத்திரையும் இன்று 30.01.2002 புதன்கிழமை பின்வருமாறு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

**காலை 06.30 மணிக்கு** - புனித சூசையப்பர் ஆலயம் -
திருப்பலியும், அஞ்சலியும் *(கொழும்புத்துறை).*

**காலை 08.30 மணிக்கு** - புனித அந்தோனியார் ஆலயம் -
திருப்பலியும், அஞ்சலியும் *(பாசையூர்).*

**காலை 10.30 மணிக்கு** - புனித பத்திரிசியார் கல்லூரி சிற்றாலயம் -
வழிபாடும், அஞ்சலியும்.

**மாலை 04.00 மணிக்கு** - புனித மரியன்னை பேராலயம் -
ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலியும்,
இறுதி யாத்திரையும்.

**அருள்திரு. ஜீவேந்திரா போல், அ.ம.தி.**
தொடர்பகம்
*ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

(4408)

இப்பத்திரிகை வலம்புரி அன் கோ தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.